விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 148 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 02 செவ்வாய்க்கிழமை (16.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## வடக்கு ஆளுநர் பதவி நீக்கம்

### ஜனாதிபதி ரணில் அதிரடி



(கொழும்பு) வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உடன் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும் கிழக்கு மற்றும் வடமேல் ஆளுநர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)

## சீனி, பால்மா விலை சதொசவில் குறைப்பு

(கொழும்பு) லங்கா சதொச நிறுவனம் இரண்டு நுகர்வுப் பொருட்களின் விலையை குறைத்துள்ளது.

அதன்படி, ரூபாய்ால்குறைக் கப்பட்ட ஒரு கிலோ கிராம் வெள்ளைச் 15

## முள்ளிவாய்க்கால் ஊர்திக்கு இராணுவம் இடையூறு



15

## குளவி கொட்டியதில் குடும்பப் பெண் பலி

### நயினாதீவில் சம்பவம்

(நயினாதீவு)

குளவி கொட்டியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை நயினாதீவு 8ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 15

## வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகம்

### ஜனாதிபதியின் யோசனை தமிழ்த் தரப்பால் நிராகரிப்பு

- தீர்க்கமான முடிவின்றி கூட்டம் நிறைவு.
- ஜூன் மாதத்தில் இரு தரப்பும் மீண்டும் சந்தித்து கலந்துரையாடத் தீர்மானம்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை இச்சந்திப்பு நடைபெற்றது. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்க, நசீர் அகமட், ஜனாதிபதியின் செயலாளர் உள்ளிட்ட அரச தரப்பு பிரதிநிதிகளும், இரா.சம்பந்தன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், எம்.ஏ.சுமந்திரன், சி.வி. விக்னேஸ்வரன், சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சிவநேசதுரை சந்திரகாந்தன், ச.வியாழேந்திரன், அங்கஜன் இராமநாதன், த.கலையரசன், கு.திலீபன் ஆகிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நேற்றைய சந்திப்பின் ஆரம்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க ஒரு யோசனை 15

உலக வங்கி

## இலங்கை அரசுக்கு முழுமையான ஆதரவு

### பணிப்பாளர் பரமேஸ்வரன்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத் திட்டத்திற்கு முழு ஆதரவை வழங்குவதாக உலக வங்கியின் நிறைவேற்றுப் 15

## இலங்கையுடனான பேச்சுவார்த்தை ஒக்டோபர் நிறைவடையும்

### சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதலாவது மதிப்பாய்வின் ஊடாக, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள், எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்திற்குள் நிறைவடையும் என 15

## நாட்டுக்கு கிடைக்கும் நிதியில் வெளிப்படைத்தன்மை அவசியம்

### அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐ.எம்.எப்பிடம் சஜித் கோரிக்கை



(கொழும்பு)

நாட்டுக்குக் கிடைக்கும் நிதியை வெளிப்படைத்தன்மையுடன் பயன் 15

## வாழ்க்கைச் செலவை குறைக்க நடவடிக்கை

### விவசாய அமைச்சர் மகிந்த

(கொழும்பு)

இந்த ஆண்டு நிறைவடைவதற்கு முன்னதாக மக்களின் வாழ்க்கைச்செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 02

## வவுனியாவில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா நகர மத்தியிலுள்ள வர்த்தக நிலையம் முன்பாக நேற்று அதிகாலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் 15

## சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்க கடுமையான சட்டம் இயற்றப்படும்

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க கடுமையான சட்டத்தை 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## திருமதி யோகநாதன் மலர்மணி



அரசடி விதி கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகநாதன் மலர்மணி 15.05.2023 அன்று காலமாகி விட்டார். அன்னார் காலம் சென்ற அப்பா-வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலம்சென்ற செல்லத்தம்பி-செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும் செல்லத்தம்பி யோகநாதன் என்பவரின் அன்பு மனைவியும் வன்னி பெரு நிலப்பரப்பெங்கும் வட கிழக்கு தேசமெங்கும் சங்குநாத கலை நிகழ்வில் பட்டை கிழப்பிய ஆச்சி வேடத்தில் முத்திரை பதித்த சகதீசன் (தீசன்) மற்றும் மேனகா ஆகியோரின் தாயாருமாவார்.தவமணி,துரைதவராஜா,கிருஸ்நேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.கமலநாதன்,ரஞ்சினிதேவி,சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

நதீனா,பிரசன்னா,நிசானா,கல்பனா,கரிகண்ணா-தர்சன்,நிதுசா, கயநிதி,சுபாஸ்,பவிதா, சரளா, திவாகர்-காவேரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.தர்சன்,கார்த்திகேயன்,விஜயதீபன்,ஆசா,கேசவன், தினேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.அத்திரியா,நிதின், நிவேதா,அஷ்மிதா,மீனுதா,யோன்யோசுவா,சக்தி,லக்சுமி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.சந்திரமணியின் அன்புச் சகோதரியுமாவார். காலஞ்சென்ற நடேசன்,வன்னமணி,மணிநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார். காலஞ்சென்ற ந.மாசிலாமணி,வே.துரை,அ.யோகன்,புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.இவர் காலஞ்சென்ற பு.சந்திரவதியின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 16.05.2023 இன்று மதியம் 12.00 மணிக்கு கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அரசடி வீதி,*
*கோண்டாவில்*
*கிழக்கு*

(15458)

*தகவல்:*
குடும்பத்தினர்
077 394 6886

## வாழ்க்கை...

பல்வேறு வழிகளில் நிவாரணங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் மின்சாரக் கட்டணங்கள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் குறைக்கப்படும் எனவும் எரிபொருள் விலை இரண்டு கட்டங்களாக குறைக்கப்படும் என்றும் அதேபோல எரிவாயு விலைகளும் மேலும் குறைவடையும் என்றார் (ம-7,9)

## தடுக்க...

இயற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

16 வயது சிறுமியின் மரணம் மற்றும் தனியார் பாடசாலை ஆசிரியர் 16 சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தமை உள்ளிட்ட அண்மைய துஷ்பிரயோக சம்பவங்களைத் தொடர்ந்து ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். (ம-7,9)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1935 . 12 . 20



இறப்பு 2023 . 05 . 15

## செல்லப்பா இராசையா

புத்தூரைப் பிறப்பிடமாவும் இல-36, D-10 உருத்திரபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் இல-136, ஆனந்தபுரம் மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசையா (புத்தூர் இராசையா) 15.05.2023 நேற்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.05.2023 இன்று பி.ப-3.00 மணிக்கு இல-136,ஆனந்தபுரம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத்தருகிறோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(C-6558)


## பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு

☞ யாழ் நகரில் வைத்திய நிலையம் ஒன்றில் 1 மாத பயிற்சியின் பின் நிரந்தர வேலை

☞ பயிற்சி பெற்ற அனுபவமுள்ள பெண் தாதியர் தேவை.

(15530)

077 873 0129

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கு அருகில் 37 அடி நீளம்,20 அடி அகலம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

(15527)

077 617 6413


## அருள்மிகு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் விழா - 2023 கேள்விப் பத்திரம் கோரல்

அருள்மிகு வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 2023/06/05 ல் நடைபெற உள்ளதால் இவ் விழாவிற்கு தேவையான பின்வரும் சேவைகளினை வழங்குவதற்கு தகுதியான வழங்குனர்களிடம் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- மின் பிறப்பாக்கியுடன் கூடிய ஒளிச் சேவை (இரண்டு வலயம்)
- ஒலி பெருக்கிச் சேவை
- தற்காலிக கண்காணிப்பு கமரா சேவை (CCTV Camera)

இச்சேவைகளினை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை எதிர்வரும் 2023/05/16 ம் திகதி முதல் 2023/05/29 ம் திகதி வரை பின்வரும் இடங்களில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.

- வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் (ஆலய காரியாலயம்)
- மாவட்ட செயலகம் முல்லைத்தீவு (கணக்கு கிளை)

கேள்விமனுக்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி 29/05/2023 ஆகும். கேள்விப்பத்திரம் 2023/05/30 ம் திகதி மாலை 2.00 க்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் திறக்கப்படும்.

மேலும் ஆலயச் சூழலில் தற்காலிக கடைகளை வாடகைக்கு வழங்குதல் 2023/06/01 ம் திகதி முதல் 04.06.2023 வரை தினசரி காலை 10.00 மணிமுதல் மாலை 04.00 வரை வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் முன்றலில் நடைபெறும்.

காவடிச் சேவை வழங்குனர்கள் கோவில் நிர்வாகத்தை தொடர்பு கொள்ளவும்.

அருள்மிகு வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த பொங்கல் விழாவிற்கு நிதிப்பங்களிப்பு மற்றும் காணிக்கைகளை வழங்க ஆர்வமுள்ள பக்தர்கள் நேரடியாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வங்கிக் கணக்கிற்கு (கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) வைப்பிலிடவோ அல்லது ஆலய காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பங்களிப்பினை வழங்கமுடியும். தனி நபராகவோ அல்லது குழுவாகவோ காணிக்கை சேகரித்தல் உள்ளூர், வெளிநாடுகளில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

திருப்பணி நன்கொடைக்கு இலங்கை வங்கி, முள்ளியவளை கிளை, கணக்கு இலக்கம் 70274525

மேலதிக தகவல்களிற்கு:
ஆலய காரியாலயம் : 024 324 3558
மாவட்ட செயலகம் : 021 229 0034

பெறுனர்,
வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில்,
மாவட்ட செயலகம்,

(C-6557)




## அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்

## வருடாந்த வெளிமடை உற்சவம் - 2023

__அம்பாள் அடியார்களே!__

நிகழும் சோபகிருது வருடம் வைகாசித் திங்கள் 12ஆம் நாள் (26.05.2023) வெள்ளிக்கிழமை மேற்படி உற்சவம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

**விளக்கு வைப்பு**

19.05.2023 வெள்ளிக்கிழமை காலைப் பூசையுடன் நடைபெறும்.

**மடைப்பண்டம் எடுத்தல்**

26.05.2023 வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணிப் பூசையினைத் தொடர்ந்து இடம்பெறும்.

**வெளிமடைப்பூசை**

27.05.2023 சனிக்கிழமை காலைப் பூசையுடன் நடைபெறும்.

**8ஆம் மடை**

02.06.2023 வெள்ளிக்கிழமை மாலைப் பூசையுடன் நடைபெறும்.

**காவடி, கரகம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளும் அடியார்கள் 26.05.2023 வெள்ளிக்கிழமை காலை 06.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை மேற்கொள்ளலாம்.**

மு.குறிப்பு கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
தரும பரிபாலன சபை

(C-6556)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடுகளை திருடும் நபர்களின் புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகும்

## விவசாய அமைச்சு அதிரடி

(கொழும்பு)

**கறவை மாடுகளை திருடும் நபர்களை கைது செய்து அவர்களின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்த நாட்களில் மாடு திருட்டுகள் அதிகரித்து வருவதாக விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளால் முறைப்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 20 லீற்றர் பால் வழங்கும் கறவை மாடுகள் திருடப்படுவதாகவும், வாரத்திற்கு சுமார் 35 மாடுகள் ஒரு மாவட்டத்தில் இருந்து திருடப்படுவதாகவும் விவசாய அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன்படி, கறவை மாடுகளை திருடி கைது செய்யப்படும் நபர்களின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## பீச் கிராப்ட் விமானம் வழங்கியது அவுஸ்திரேலியா

(கொழும்பு)

அவுஸ்திரேலிய விமானப்படைக்குச் சொந்தமான பீச் கிராப்ட் விமானம் ஒன்று இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரினால், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. அன்பளிப்பாக வழங்கப்பட்ட நவீன இரட்டை எஞ்சின் கொண்ட வரசடிழிசழி விமானத்தின் மூலம் இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த முடியும் என அவுஸ்திரேலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி விமான செயற்பாடுகள் குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கம் 12 மாத காலம் இலங்கைக்கு உதவிகளை வழங்கவுள்ளதோடு, அதன் பின்னர் அதன் பொறுப்புக்கள் இலங்கை அரசாங்கத்துக்கு கையளிக்கப்படும். (நி)

## மும்மடங்காக அதிகரித்தது டெங்கு

(கொழும்பு)

2023 இல் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு வருடங்களிலும் பதிவாகியதை விட மும்மடங்கு அதிகமாகும் என மருத்துவ சேவைகள் உதவிப் பணிப்பாளர் மருத்துவர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மழைக்காலம் தொடர்வதால் எதிர்வரும் வாரங்களில் குறித்த நோய்ப்பரவல் எண்ணிக்கை நாடளாவிய ரீதியில் மேலும் அதிகரிக்கும் என அவர் தெரிவித்தார்..

"கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்து அதிகளவான நோயாளர்கள் பதிவாகின்றனர்.

எனவே, நுளம்புகளின் வாழ்விடங்களை அழித்தல், நுளம்பு விரட்டிகளைப் பயன்படுத்துதல், நீர் தேங்கும் இடங்களை சுத்தம் செய்தல், பாதுகாப்பான ஆடைகளை அணிதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்துகிறோம்"

மருத்துவமனைகளில் சாதாரண வார்டுகளில் இடப்பற்றாக்குறை தற்போது இல்லையெனவும் தீவிர சிகிச்சைப் பிரிவில் நெரிசல் ஏற்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## சீரற்ற காலநிலையால் வெள்ளத்தில் மூழ்கிய தென்னிலங்கையின் பல பகுதிகள்






(கொழும்பு)

நாட்டின் பல பகுதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நில்வள கங்கை மற்றும் ஜின் கங்கை பெருக்கெடுத்து ஓடுவதால், மாத்தறை மாவட்டத்தின் பல பகுதிகள் தாழ்வான நீரில் மூழ்கியுள்ளன.

தவலம, நெலுவ, மொரவக, அக்குரஸ்ஸ, அத்துரலிய, பிடபெத்தர மற்றும் கொட்டபொல ஆகிய தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து மழை பெய்து வருவதால், 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

## விவசாயத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு மானிய வட்டி வீதத்துடன் கடன் திட்டம்

### விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர

(கொழும்பு)

விவசாய நடவடிக்கைகளில் ஆர்வமுள்ள வேலையற்ற இளைஞர்களுக்கு மானிய வட்டி வீதத்துடன் கடன்களை வழங்கும் விசேட வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளால், வேலை வாய்ப்பின்றி தடுமாறும், அரச வங்கிகளில் கடன் பெற முடியாதநிலையில் உள்ள, விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப் படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இளைஞர்களிடையே இது போன்ற நடவடிக்கைகளை மேலும் ஊக்குவிக்கும் முயற்சியாகவும், விவசாயம் சார்ந்த செயல்களில் ஆர்வமுள்ளவர்களுக்கு சொந்தமாக பண்ணை அல்லது கால்நடை வளர்ப்பை மேலும் மேம்படுத்தும் முயற்சியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 இளைஞர்களுக்கு, 6.5% என்ற வட்டி வீதத்தில் 10 இலட்சம் மற்றும் 20 இலட்சம் ரூபாவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரச வங்கிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## இறக்குமதியான இந்திய மயக்க மருந்தில் ஒரு இலட்சம் மருந்துகள் தரமற்றவை

### மருந்து மற்றும் சிவில் உரிமைகள் சங்கம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட இந்திய மயக்க மருந்தில் ஒரு இலட்சம் மயக்க மருந்து குப்பிகள் தரமற்ற நிலைமைகள் காரணமாக பாவனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இந்த மருந்து இந்திய நிறுவனத்திடம் இருந்து வாங் கப்பட்டுள்ளதாகவும், இந்த மருந்தைப் பயன்படுத்துவதால் நோயாளிகளுக்கு ஏற்படும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு அவை பயன்பாட்டிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட இந்த மருந்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே சுகாதார அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்தி மருந்தை வாங்கியவர்களிடம் இழப்பை வசூலிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

118 ஆவது ஜனன ஆண்டு
53 ஆவது நினைவஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
பொன்னையா (Chairman ponniah)

நெல்லியடி பட்டினசபையின்(தற்போதய கரவெட்டி பிரதேச சபை) முதலாவது கௌரவ தவிசாளராக, தவிசாளருக்குரிய எதுவித கொடுப்பனவுகளும் பெறாது தவிசாளர்களிற்கு முன்மாதிரியாக சேவையாற்றியுள்ளார்.
இறைபக்தியுடன் கூடிய நிர்வாகத் திறனுடன் நேர்மையான, துணிச்சல் மிக்க அரச உயர் அதிகாரியாக கூட்டுறவு உதவிக் கொமிசனராக (ACCD) பணியாற்றியுள்ளார்.
மன்னார் மாவட்ட வெள்ளப்பெருக்கின்போது (1957) திருக்கேதீச்சர ஆலயச் சூழலில் அமைந்திருந்த மடங்களில் சமய, இன,மொழி, சாதிப் பாகுபாடு (இந்து-பௌத்தம், கிறிஸ்தவ-இஸ்லாமிய) காட்டாது அவசரகால அத்தியாவசியப் பணிகளை ஒருங்கிணைத்து உணவு,குடிநீர்,சுகாதார முறைகளை ஆலயச் சூழலில் நெறிப்படுத்தி அருந்தொண்டாற்றியுள்ளார்.
தமிழ்மொழியிலும்,சைவத்திலும் பற்றுறுதி கொண்டு அரச உயர் அதிகாரி பதவியில் இருந்து இளைப்பாறியுள்ளார்.

அவரது பணிகளை நினைவு கூர்ந்து
(நன்றி- மன்னார் மாவட்ட வெள்ளப்பெருக்கு (1957) தொடர்பான சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்களது அறிக்கை- திருக்கேதீச்சர ஆவணப் பெட்டகம்-2022,பக்கம்-343)

சேர்மன் பொன்னையா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(15522)
சேர்மன் பொன்னையா அறப்பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனி போன்ற வீரர் நூற்றாண்டுக்கு ஒரு முறைதான் கிடைப்பார்கள்

## சுனில் கவாஸ்கர்



நடப்பு ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. அனைத்து அணிகளுக்கும் ஒன்று முதல் இரு போட்டிகள் மட்டுமே மீதமிருக்கும் நிலையில், பிளே ஆஃப் சுற்றுக்கான வாய்ப்பை இதுவரை எந்த அணியும் உறுதி செய்யவில்லை. இதனால் ஒவ்வொரு போட்டி மீதான எதிர்பார்ப்பும் ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

எந்த சீசனில் நடக்காத வகையில் இந்த சீசனில் சில சம்பவங்கள் அரங்கேறி உள்ளன. சென்னை அணி வெளிமாநில மைதானங்களில் விளையாடினால் சென்னை அணியின் ரசிகர்கள் மைதானங்கள் முழுக்க சூழ்ந்தனர்.

அதுமட்டுமல்லாமல் எதிரணி ரசிகர்களும் டோனியை பார்ப்பதற்காகவே மைதானங்களுக்கு வந்தனர். இந்த நிலையில் சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற கடைசி லீக் போட்டியில் சென்னை அணி களமிறங்கியது. இந்தப் போட்டியில் சென்னை அணி கொல்கத்தா அணியிடம் தோல்வியடைந்தது. சென்னையில் கடைசி லீக் போட்டி என்பதால் டோனியும், சென்னை அணி வீரர்களும் மைதானம் முழுக்க வலம் வந்து ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

அப்போது திடீரென வந்த சுனில் கவாஸ்கர், டோனியிடம் தனது சட்டையில் ஆட்டோகிராஃப் போடுமாறு கேட்டுக் கொண்டார். இதையடுத்து டோனியும் அவரது சட்டையில் ஆட்டோகிராஃப் போட, இருவரும் கட்டிப்பிடித்து அன்பை வெளிப்படுத்தினர். இந்த சம்பவம் சென்னை அணி ரசிகர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் பேசுகையில் எம் எஸ் டோனியை போன்ற வீரர்கள் நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தான் வருவார்கள். அதனால்தான் அவர் தொடர்ந்து விளையாடுவதை பார்க்க வேண்டும் என அனைவரும் விரும்புகிறார்கள். இது டோனியின் கடைசி சீசனாக இருக்கக் கூடாது என நான் ஆசைப் படுகிறேன். அவர் இன்னும் சில காலம் விளையாட வேண்டும்என அவர் கூறினார். வாழ்நாளில் எத்தனையோ சாதனைகள், எத்தனை வீரர்களை பார்த்துள்ள சுனில் கவாஸ்கர், டோனியை புகழ்ந்து ஆட்டோகிராஃப் பெற்றுள்ள சம்பவம் ஐ.பி.எல் தொடரின் மிகமுக்கிய சம்பவமாக பார்க்கப்படுகிறது. (4)

# கடற்கரையோர கரப்பந்தாட்டபோட்டி அம்பன் பிங்பொங் கழகம் வெற்றி

இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கடற்கரையோர கரப்பதந்தாட்ட இறுதிப் போட்டியில் அம்பன் பிங் பொங் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

தாளையடியில் 55 ஆவது காலால் படையணியின் பகுதிக்கு உட்பட்ட கடற்கரையோரத்தை சேர்ந்த 22 விளையாட்டுக் கழகங்களுக்கு கடற்கரை யோர கரப்பந்து பயிற்சி அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நிலை யில் கடந்த 12 ஆம் திகதியிலிருந்து தெரிவு போட்டிகள் நடத்தப்பட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இறுதிப்போட்டி இடம் பெற்றது.

55 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் இறுதி போட்டிக்கு தெரிவாகிய அம்பன் பிங் பொங் விளையாட்டுக் கழகமும், கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் அம்பன் பிங் பொங் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள், கேடயங்கள் வழங்கப்பட்டன. (4-6-60)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2831


### நந்தியா




### சதுஷன்




### சாமந்தி




### ருக்ஷாயினி




### துவேனி




### தாருஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்கு நீராடச் சென்ற மாணவன் சடலமாக மீட்பு- மட்டக்களப்பில் சம்பவம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகல்லாறு கடலில் இருந்து நேற்று மாணவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. பெரியகல்லாறு கடலில் நேற்று முன்தினம் மாலை 3 இளைஞர்கள் நீராடிக்கொண்டிருந்தனர்.

அதில் ஒருவரை கடலலை இழுத்துச் சென்ற நிலையில், ஏனைய இருவரும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளனர்.எனினும் கடலில் மூழ்கிய வரை இரவு வரையில் தேடியும் கிடைக்காத நிலையில் நேற்றுக் காலை அவர் அக் கடலிலிருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்டவர் பெரிய கல்லாற்றில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர் எனவும். அவர் இவ்வருடம் கல்விப் பொதுத்தர சாதாரண தரப் பரீட்சைக்கும் தோற்றவுள்ளவர் எனவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)



தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாகனம் நான்காம் நாளான நேற்று கிளிநொச்சியிலிருந்து பயணத்தை ஆரம்பித்தது.தொடர்ந்து கிளிநொச்சி நகர் ஊடாக பயணித்து பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

(படம்-சப்தசங்கரி)

# தேரர்களின் பாதயாத்திரை திருமலையில் இருந்து ஆரம்பம்



(திருமலை)

திருகோணமலையில் இருந்து கண்டி நோக்கிய தாய்லாந்து பௌத்த பிக்குகளின் பாதயாத்திரை (உபசம்பதா) ஆரம்ப நிகழ்வானது நேற்று ஆரம்பமானது. இதில் 50 க்கும் மேற்பட்ட தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் பங்கேற்றனர். (நி)

# இலங்கையில் அதிகரித்து வரும் தொழுநோயாளர்கள்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 500 தொழு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் இது கடந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எனவும் தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருததுவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

இந்த வருடத்தின் கடந்த நான்கு மாதங்களில் கொழும்பு மாவட்டத்தில் 86 நோயாளர்களும், கம்பஹா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 48 நோயாளர்களும், காலி மாவட்டத்தில் 36 நோயாளர்களும், ஏனையவர்கள் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய நான்கு மாவட்டங்களில் இருந்து 218 நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், ஏனைய 21 மாவட்டங்களில் இருந்து 282 நோயாளர்கள் பதிவாகி யுள்ளனர்.

தொழுநோயைக் குணப்படுத்துவதற்கு மிகவும் வெற்றிகரமான மருத்துவ முறைகள் இருந்தும், சமூகத்தில் இன்னும் நிலவும் தவறான எண்ணங்களால் பல நோயாளிகள் சிகிச்சைக்காக மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை கிளினிக்குகளுக்குச் செல்லாமல் தங்கள் நிலையை மோசமாக்கியுள்ளனர்.

இந்த நோய்க்கு முறையான சிகிச்சை அளித்தால், ஆறு மாதங்களுக்குள் குணமாகிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)




(சி-2005)


# இராசிபலன்

16.05.2023
வைகாசி 02, செவ்வாய்க்கிழமை
துவாதசி பின்னிரவு - 12.19 மணிவரை

உத்திரட்டாதி முற்பகல் 9.04 மணிவரை
சுபநேரம் -10.23-11.53 மணிவரை
இராகுகாலம்- 2.53-4.23 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம் - மகம்.

வள்ளவன்

**மேஷம்** தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்,குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்** பிரியமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், உங்கள் திறமைகள வெளிப்படும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல்நலன் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**கன்னி** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணையலாம், பொறுமையில் பெருமை சேரும் நாள், பயணத்தால் பலனுண்டு, புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், முயற்சியில் கைகூடும்.

**துலாம்** செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**விருச்சிகம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு** உறவினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்

**மகரம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு சிறப்பினைத் தரும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** குடும்பத்தினரால் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** பொருளாதார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நிதானத்துடன் செயற்பட வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகளில் அனுகூலம், வழி பாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

உன்னை வளர்ப்பது வசதிகள் அல்ல சிரமங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விடுவிக்கப்பட்ட வலி.வடக்கு பகுதியில்

# மக்கள் குடியேறாத காணிகளில் திருட்டுக் கும்பல்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் குடியேறாத பொதுமக்களின் காணிகளில் உள்ள பெறுமதியான உடைமைகள், பொருட்கள் வேறு பிரதேசத்தை சேர்ந்தவர்களால் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெல்லிப்பளை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலகத்தால் அனுப்பப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வலி வடக்கில் அண்மையில் சில பிரதேசங்கள் பொது மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது.

30 ஆண்டுகளிற்கு பின்பு விடுவிக்கப்பட்ட அவ் இடங்களில் பல பொது மக்களது மிகவும் பெறுமதி வாய்ந்த உடைமைகளும் சொத்துக்களும் இருந்தன.

அவ் நிலப்பரப்புக்கள் விடுவிக்கப்பட்டவுடன் ஊடகங்கள் மூலமாகவும் கிராம மட்ட அலுவலர்கள் ஊடாக தொலைபேசி வாயிலாகவும் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் உள்ள, தங்களது நிலப் பிரதேசங்களை உரிய முறையில் அடையாளப்படுத்தி பெறுமதியான தங்களது சொத்துக்களையும் உடமைகளையும் பாதுகாக்குமாறு நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். எமது கோரிக்கைக்கு அமைவாக பல பொது மக்கள் தமது நிலப் பிரதேசங்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் சில காணி உரிமையாளர்கள் தமக்குரிய நிலப் பிரதேசங்களை அடையாளப்படுத்தி அங்கு தமக்கு சொந்தமான உடமைகளை பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதில் அசமந்த போக்குடன் இருக்கின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களை தமக்கு மிகவும் சாதகமாகப் பயன்படுத்தி பல் வேறு பிரதேசங்களில் இருந்து நாளாந்தம் வருகை தரும் பல திருட்டு கும்பல்கள் மிகவும் பெறுமதியான சொத்துக்களையும் உடைமைகளையும் திருடிச் செல்கின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் பகல்-இரவு என அனைத்து வேளைகளிலும் மிகவும் நூதனமான முறையில் நடைபெறுவதால் பொது மக்களின் உடைமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடமும் நாம் கோரிக்கை முன்வைத்திருந்தோம். இருப்பினும் மிகப் பரந்தளவிலான பிரதேசங்களில் உள்ள பல பொது மக்களது உடைமைகளை 24 மணி நேரமும் பாதுகாப்பதற்குரிய காவல் பணிகளை மேற்கொள்வது என்பது பொலிஸாரின் இயலுமைக்கு மிகவும் சவாலாக உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பொது மக்கள் தமக்குரிய பொறுப்பினை சரிவர உணர்ந்து தமக்கு சொந்தமான மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள, தமக்குரிய சொத்துக்கள் மற்றும் உடைமைகளை திருட்டு கும்பல்களிடமிருந்து பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். (4-6)

# இரும்புப் பாகங்களைத் திருட முயன்ற ஐவர் கைது

(அராலி)

காங்கேசன்துறை நல்லிணெக்கபுரத்தை சேர்ந்த ஐவர், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையினுள் நுழைந்து அங்கிருக்கும் இரும்புப் பாகங்களை திருடிச் செல்ல முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த் கைது நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்களுக்கு உடந்தையாக இருந்த காவலாளிகள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இரும்பினை ஏற்றிச் செல்வதற்கு முற்பட்ட வாகனமும் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வாறு கைது செய்யப்பட்ட எட்டுப்பேரும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில், சான்றுப் பொருட்களுடன் பாரப்படுத்தப்பட்டனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)



மனிதப் படுகொலை இடம்பெற்ற, நவாலி சென்பீற்றர் தேவாலயத்தில் உள்ள நினைவேந்தல் தூபியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்:-கஜிந்தன்)

# சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு இறுதிக்கட்டத்தில்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் அண்மையில் நீர் விசிறி தூய்மைப்படுத்தப்பட்டது.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் நல்லூரில் காணப்படும் சங்கிலியன் தோரண வாசல் யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மரபுரிமைச் சின்னங்கள் அழிந்து போகாமல் அவற்றைப் பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினருக்கு அவ் மரபுரிமைச் சின்னங்களை ஒப்படைக்க வேண்டிய தார்மீகக் கடமையுடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் முன்னெடுக்கப்படும் முதலாவது செயற்றிட்டம் இதுவாகும். (4-6-33)

# நாவற்குழிப் பகுதியில் கார் ஒன்று மீட்பு

## நால்வர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நாவற்குழிப் பகுதியில் வைத்து கார் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

காரில் இருந்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பித்துச் சென்ற நிலையில் பொலிஸார் காரை மீட்டுள்ளனர்.



இந் நிலையில் விசேட பொலிஸ் குழுவொன்று மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கைதானவர்கள் ஏற்கனவே குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# சாதாரணதர மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கு டன் யாழ். இந்துக்கல்லூரி கணித ஆசிரியர் அமரர் செல் லையா தவராஜாவின் ஞாபகார் த்தமாக தமிழ் மக்கள் கூட்டணி யின் கல்வி மேம்பாட்டுப் பிரிவு இலவசக் கல்வி கரத்தரங்கு ஒன்றினை நடத்தவுள்ளது.

மேற்படி கருத்தரங்கானது எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சித்தங்கேணிச் சந்தியிலுள்ள மகா கணபதி மண்டபத்திலும் மறுநாள் திங் கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள DCM கல்வி நிலையத்திலும் நடைபெறும். கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கொண்டதாக இக் கருத்தரங்கு அமையும்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு, கொழும்பு பிரபல பாடசாலைகளின் வினாத்தாளுடன் கூடிய கையேடுகள் மற்றும் கருத் தரங்கில் பங்குபற்றுவதற்குத் தேவையான எழுது கருவிப் பொருட்கள் என்பன வழங்கப்படும்.

எனவே குறித்த கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் பெயர் மற்றும் பாடசாலையின் விபரங்களை 075 024 2472 என்னும் இலக்கத்திற்கு அனுப்பி பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தமிழ் மக்கள் கூட்டணி கல்வி மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் வ.பார்த்தீபன் அறிவித்துள்ளார். (4-6)

# குமுதினிப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

குமுதினி படகில் படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவுத் தூபி வளாகத்தில் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

காலை 8.15 மணிக்கு நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும் சம நேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி சிறப்பு பூஜையும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு குமுதினி படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றது. நினைவுத் தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுக ளுடன் ப்சுந்தீவு ருத்திரனின் குருதியின் குமுறல்கள் என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் நெடுந்தீவு பகுதி மதத்தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்

# திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா

# அவர்களின் மணிவிழா சிறப்பு மலர் - 16.05.2023

## வாழ்த்துச் செய்தி



திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா அவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்றுவரை பணியாற்றி வருகின்றார். அவரிடம் மாணவர்களை அன்புடன் வழிப்படுத் துதல், ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல், ஆளுமை, இரக்க குணம் போன்றவற்றைக் கண்டு வியப்புற்றேன்.

இவர் கர்நாடக இசையில் சிறந்த நிபுணத்துவம், ஆற்றல் உடையவராகவும் ஆற்றுகைக் கலைஞராகவும் திகழ்ந்து வருகின்றார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்ப்பிலும் வளர்ச்சியிலும் இவரதும் இவரது குடும்பத்தினரதும் அளவில்லா சேவையினைக் குறிப்பிடலாம். 2000 ஆம் ஆண்டு போர்க்கால வேளையில் கல்லூரியை மூட வேண்டிய இக்கட்டான சூழலில் எமது கல்லூரியானது யாழ் இராமநாதன் கல்லூரியில் இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது தனது வீட்டை மாணவர்கள் தங்கி இருந்து கற்பதற்கு வழிசமைத்தவர்.

கல்வியியற் கல்லூரி சார்ந்த மாணவர்கள் நலன் நோன்பு செயற்றிட்டங்கள், கல்லூரியினை அழகுபடுத்துவதற்கான செயற்றிட்டங்கள், கல்லூரி - பாடசாலை இணைப்பாக்கமாக கலை வலம் செயற்பாடு, மாணவர்கள் உணவு ஊட்டத்திற்கான பங்களிப்பு எனப் பல விடயங்களில் தனது அளப்பரிய சேவையை நல்கினார். எமது கல்லூரியில் இயங்கும் தமிழ் மன்றம், அழகியல் மன்றம், இந்துமாமன்றத்தின் அங்கத்தவராகவும் இருந்து வழிகாட்டல்களை மேற்கொண்டார். இசையர்ச்சனை, இசைச் சங்கமம் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தி மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தியதோடு கல்லூரியின் உயர்வு, வளர்ச்சி, புகழ் ஏற்படுவதற்கு காரண கர்த்தாவாகத் திகழ்ந்தவர். நான்கு பீடாதிபதிகளின் காலங்களிலும் அளப்பரிய சேவையை நல்கிய திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா அவர்களின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல வித்தக விநாயகர், முடி கொண்ட வைரவர் அருள் கடாட்சம் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்.

**சுப்பிரமணியம் பரமானந்தம்,**
**பீடாதிபதி.**

## கல்லூரியின் ஆரம்ப கர்த்தா



யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் ஆரம்பம் (Initialisation) என்பது எளிமையானதொன்று. அதன் பின்னால் உள்ள முயற்சிகள், பிரயத்தனங்கள், சவால்கள், வலிகள், வேதனைகள் என்பன சொல்லில் அடங்காதவை என்பது ஒரு சிலருக்கே தெரிந்திருக்கும்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்ற கலைக்கோயிலின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகப் போற்றப்பட வேண்டியவரே திருமதி. நரேந்திரா அவர்களாவர். கல்லூரியின் ஆரம்ப காலங்களில் கலாநிதி கமலநாதன் அவர்களின் நிகரில்லா முயற்சிக்கு பக்கபலமாக நின்று மாணவர் சார்பாக அநேக நலன்புரிச் செயற்பாடுகளில் எவ்வித பிரதிபலன் இன்றி தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றிய பெருந்தகைகளில் ஒருவர் திருமதி.நரேந்திரா எனின் மிகையாகாது. திருமதி. நரேந்திரா அம்மணி அவர்கள் தனது பணி மகிழ் காலத்தில் சீரும் சிறப்புமாக தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளத்துடன் !!!

**திரு.ரி.ஜெயகாண்டீபன்,**
**உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)**

## வரலாற்று நாயகி



திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா அவர்கள்.

எமது கல்லூரியின் வரலாற்றுத் தடங்களில் மிகப் பெரிய சாதனையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்னும் பெருவிருட்சத்தில் ஆணி வேர்களில் ஒருவராகச் செயற்பட்டவர். கல்லூரியின் ஆரம்பகால முத்து வெள்ளிவிழா காண இருக்கும் கல்லூரியின் மிகப் பெரிய சொத்து. அவர் கல்லூரி ஈட்டிய சாதனைகள் பலவற்றுக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். கல்லூரியின் ஆரம்ப காலங்களில் அவரது வீட்டை மாணவர் விடுதிக்காக இலவசமாக வழங்கியிருந்தார். 2001 ஆம் அண்டு இக்கல்லூரி பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி முதன்மை இடங்களைப் பெறுவதற்கு முக்கிய காரணமாகவும் இருந்துள்ளார். கல்வி அமைச்சால் 2001 ஆம் ஆண்டு இக்கல்லூரி முதன்மைக் கல்லூரியாக அறிவிப்பதற்கு இச்சிறப்புக்கள் காரணமாக அமைந்திருந்தன. மணிவிழா நாளில் அவருக்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நல்ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S.R சத்தியேந்திரம்பிள்ளை,**
**உப பீடாதிபதி (தொடருறு கல்வி).**

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இசைத்துறை விரிவுரையாளர் திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றில் பங்களிப்புச் செய்த விரிவுரையாளர்களில் திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவர் ஆரம்ப காலம் தொட்டு இசைத்துறைக்கு இணைக்கப்பட்ட விரிவுரையாளர், நிரந்தர விரிவுரையாளராகப் பணியாற்றி பல இசைத்துறை ஆசிரியர்களை கல்வி உலகிற்கு வழங்கிய பெருமைக்குரியவர். திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா அவர்கள் முகிழ்நிலை ஆசிரியர்களிற்கு நல்லதொரு குருவாகவும் தாயாகவும் சக விரிவுரையாளர்களிற்கு நல்லதொரு சகோதரியாகவும் நிர்வாகத்திற்கு நல்லதொரு ஆலோசகராகவும் இவர் தனது ஆளுமை தடத்தை கல்லூரியில் பதித்துச் செல்கின்றார்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

எனும் திருக்குறளுக்கேற்ப வாழ்ந்தவர் ஆவார். இவரின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**த.தவநேசன்,**
**உபபீடாதிபதி, கல்வியும் தரமேம்பாடும்.**



பெயர்- திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா
படித்த பாடசாலை:- யா/இராமநாதன் கல்லூரி
பல்கலைக்கழகம்:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
BFA (Music) MA (culture) M.Ed.
Dip. in. Ed (NIE) கலாவித்தகர் -NCOMS
ஆசிரிய தொழில்:- யா/ஏழாலை மகா வித்தியாலயம் 17.08.1988-13.08.1989
யா/இராமநாதன் கல்லூரி 14.08.1989-30.04.2000
விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 01.05.2000-16.05.2023
தந்தை-தாய் - கந்தையா ஆறுமுகம், சரஸ்வதி ஆசிரியர்கள்
சகோதரர்:- ஸ்ரீஸ்கந்த மூர்த்தி -குகமூர்த்தி, திருமுருகன், குககுமாரி, கோணேஸ்வரி, கேதீஸ்வரி.
கணவர்:- ராஜசிங்கம்-நரேந்திரா (ஓய்வுநிலை ஆசிரியர்)
மகள்:-உசேணி

## இசை நாயகிக்கு வாழ்த்துக்கள்



கடந்த இருபத்துமூன்றாண்டு காலமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சிக்கும் தரமான கல்விக்கும் வலுவான அடித்தளமொன்றை யிட்டு கல்லூரியின் இசைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய திருமதி.நரேந்திரா விக்னேஸ்வரி அவர்களின் அகவை அறுபதில் பணிநயப்பு வாழ்த்து வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

எளிமையான தோற்றம், அன்பான அறிவுபூர்வமான வார்த்தைகள், மாணவர்களிடமும் ஏனையோரிடமும் காட்டும் தாயிற்கு ஈடான கருணை, உடன் பணிபுரிவோரிடமும் சமூகத்தோடும் இருக்க வேண்டிய நட்புறவு என்பன அவரிடம் காணப்படும் நற்பண்புகள் ஆகும்.

ஒரு பூ அரும்பாகி,மொட்டாகி,முகையாகி,மலராகி, அலராகி, மணம் பரப்புவதைப் போல இசைத்துறைக்கு இவரின் பங்களிப்பு அளப்பரியது. பல துறைகளில் மிளிர்ந்த திருமதி. நரேந்திரா விக்னேஸ்வரி அவர்கள் காலத்தின் கட்டாயத்தால் சேவையை நிறைவு செய்தாலும் அவரின் ஓய்வுக் காலம் சீருடனும் சிறப்புடனும் அமையவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விக்கும் சமூகத்திற்கும் இசையால் பணி செய்யவும் எல்லாம் வல்ல வித்தக விநாயகரையும் முடிமன்னர் வைரவரையும் பிரார்த்திக்கின்றேன்.

**அருணாசலம் குகன்,**
**உபபீடாதிபதி (நிறுவன அபிவிருத்தி)**

## ஆசிச் செய்தி



'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'.

சைவமும் தமிழும் தழைத்தோங்கப்பாடுபட்டு உழைத்து வரலாற்றில் தம்மைப் பதிவு செய்து கொண்டிருக்கிருக்கின்ற உயர்ந்த குடும்பமே இவரது விளைநிலம். இவ் விளைநிலத்தின் நீட்சியே இன்று மணிவிழாக் காணும் திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா அவர்கள். விளைநிலம் தரமானது எனின் விளைபொருளும் தரமானதாகவே இருக்கும் என்பதற்கேற்ப, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த ஆசிரியத்துவ ஆளுமையின் முழுமையான் வெளிப்பாடான இவரையிட்டு நான் பெருமிதம் கொள்கிறேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இவர் ஒரு அன்னை, இவர் ஒரு ஆசிரியர், இவர் ஒரு நண்பர், இவர் ஒரு சகோதரி, இவர் ஒரு ஆலோசகர்,இவர் ஒரு வழிகாட்டி இன்னும் பற்பல.....

ஓய்வுக்காலம் அதே சிறப்புடனும் நிறைவுடனும் செழித்தோங்க எல்லாம் வல்ல வித்தக விநாயகரையும் நல்லூர்பதி வாழ் அழகன் முருகனையும் [illegible] பிரார்த்திக்கின்றேன்.

**[illegible], தலைவர்,**
**கல்வியியலாளர் கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் முதற்பீடாதிபதியின் வாழ்த்துரை



இனிய அகவை அறுபது கண்ட திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா அவர்களை அவரது மணிவிழா நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். அவர் நல்லாரோக்கியத்துடன் சகலதும் பெற்று சிறப்புற வாழ எல்லாம் வல்ல நல்லூர் கந்தசுவாமியாரைப் பிரார்த்திக்கிறேன்.

அன்பு, கருணை, இன்சொல் உரைத்தல், அமைதி போன்றன இவரது சிறப்பான இயல்புகள் ஆகும்.

அந்த இயல்புகளே அவரை முகிழ்நிலை ஆசிரியர்கள் மத்தியில் நெருக்கமாக நிலைபெறச் செய்திருந்தன.

அவர், இவர் என்ற பேதமின்றி மாணவர்கள் அனைவரையும் அன்பு கனிய நேசித்தார். வெளிமாவட்ட பிள்ளைகளிடம் அவருக்கு அக்கறை அதிகம். தாய்,தந்தை,உற்றார்,உறவினர் அனைவரையும் பிரிந்து கல்லூரி விடுதியிலே இருந்த அவர்களுக்கு, அவர்கள் எல்லோராகவும் விக்னேஸ்வரி அவர்கள் அன்பு செலுத்தியதை நாமறிவோம்.

அவரது ஓய்வுக்காலம் வளம் பெற எல்லாம் வல்ல நல்லூர் கந்தப் பெருமானை மீண்டும் பிரார்த்திக்கின்றேன்.

**முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்,**
**முன்னாள் முதற் பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை பணியாற்றிய திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா அவர்களிடம் பல்வேறு திறன்களையும் ஆற்றல்களையும் ஆளுமையையும் கண்டிருக்கிறேன். அவரது அன்பும் இரக்க சுபாவமும் ஆளுமை மிக்க செயற்பாடுகளும் என்னை வியப்படையச் செய்துள்ளன.

நேரந்தவறாமை, ஒப்படைத்த பொறுப்புக்களை செவ்வனே செய்யும் கடமையுணர்வு, துறைசார்ந்த நிபுணத்துவம், கல்லூரியின் மீதான பேரன்பு, தேவையறிந்து உரிய நேரத்தில் உதவும் பண்பு போன்றவை இவரது சிறப்பியல்புகளாகும்.

சிறந்த குரல்வளமும் சங்கீத ஞானமும், புலமையும் நேர்மனப்பாங்கும் உடைய இவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்குக் கிடைத்த பெரிய பொக்கிஷம் என்றே கூறலாம்.

தனது குடும்பத்துடன் நீண்டகாலம் சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ கல்லூரியின் காவல் தெய்வம் வித்தக விநாயகரும் முடிமன்னர் வைரவரும் அருள்புரிவார்களாக.

**திரு.S.K.யோகநாதன்,**
**முன்னாள் பீடாதிபதி.**

## ஆசிச் செய்தி



சைவத்தையும் தமிழையும் வளர்த்து வரும் குடும்பப் பின்னணியில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருகின்ற திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா அவர்கள் சமூகம் போற்றும் சிறந்த ஒழுக்க விழுமியப் பண்புகளைக் கொண்டவராவார்.

ஆழ்ந்த ஆன்மிக ஈடுபாடும் எல்லோரையும் சமமாக ஏற்று நடத்தும் மனப்பாங்கும் சிறந்த விருந்தோம்பல் பண்பும் இவரிடம் நிறைந்து காணப்படுகின்றன.

இதனால் மாணவ ஆசிரியர்களாலும் விரிவுரையாளர்களாலும் கல்விசாரா உத்தியோகத்தர்களாலும் கல்லூரியில் கற்று வெளியேறிய ஆசிரியர்களாலும் மிகவும் மதித்து விரும்பப்படுகின்ற ஒருவராகக் காணப்படுகிறார்.

இன்னும் சிறப்பாக வித்தக விநாயகர் ஆலயத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஆர்வமாய் ஈடுபட்டு உழைத்தார். கல்லூரியின் நிர்வாகம் சார் வேலைகளிலும் முழு மனதுடன் ஒத்துழைப்பை வழங்கி வரும் இவர் நிறுவனத்தின் மிகச்சிறந்த ஆளுமையுள்ள கல்வியியலாளர் எனக் கூறுவது சாலவும் பொருத்தமானது.

மணிவிழாக் காணும் விரிவுரையாளர் தனது ஓய்வுக் காலத்தில் சீருடனும் சிறப்புடனும் குடும்பத்தினருடன் வாழ எல்லாம் வல்ல வித்தக விநாயகர் பாதம் பணிந்து வணங்கி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**திரு.சதாசிவம் அமிர்தலிங்கம்.**
**முன்னாள் பீடாதிபதி.**

## பதிவாளர் உள்ளத்திலிருந்து



அன்பான உறவுகளின் அரவணைப்பில் நீயும் அறுபதை நிறைவு செய்தே அடுத்த அடி வைத்தாய்! இன்றுன்றன் பிறந்தநாளில் மனம் நிறைந்த வாழ்த்தை இன்றமிழில் சொல்லிடுவேன் ஏற்றுக் கொள்வாயே! என்றும் நீ உடல் நலமும் உள நலமும் பெற்றே எழுகதிராய்க் கவிவானில் வளைய வர வேண்டும்! பொன்போலும் மிக்கொளிரும் பண்பிலுயர் நட்பே, புவனத்தில் போராடும் புகழோடும் வாழி!!

சித்தமெலாம் குமுகாய நலந்தன்னை நாடும் சீர்திருத்தும் எண்ணத்தில் அது குறித்தே பாடும்! சத்தியத்தின் வழிநின்று அறிவுரைகள் சொல்லும் சமத்துவத்தை வலியுறுத்தி நற்படைப்பு நல்கும்! முத்தான கவிதைகளில் மனிதநேயம் பூக்கும் முப்போதும் முழுவீச்சில் வாட்டத்தைப் போக்கும்! தித்திக்கும் தமிழன்னை ஆசிகளால் நீயும் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழி!!

ஈன்றெடுத்த அன்னை மனம் ஈர விழியுடனே எங்கிருந்த போதுமுனை அன்போடு வாழ்த்தும்! வான்மேகம் குளிர்ந்து வந்து வாழ்த்து மழை தூவும் வளர்நிலவும் வழிமொழிந்து தண்ணொளியால் வாழ்த்தும்! மேன்மைமிகு நின்பாக்கம் பார்மெச்ச வேண்டும் வித்தகியே நின்பெருமை விண்பேச வேண்டும்! தேன்தமிழ்போல் இனிமையுடன் இளமையொடு நாளும் திக்கெட்டும் புகழ் மணக்க நூறாண்டு வாழி!!

**இரா.நேசன்,**
**பதிவாளர்.**

(C-6554)

# கிளிநொச்சி நகர்ப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நேற்று கிளிநொச்சி நகர்ப்புற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட A9 பிரதான சாலையை மையமாக கொண்ட பகுதிகளை டெங்கு அற்ற சூழலாக மாற்றுவத ற்கான சிரமதான வேலைத் திட்டமாக இது முன்னெடுக் கப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட செயலகம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு,பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பாதுகாப்புத் துறையினர்,சிவில் பாதுகாப்பு திணைக்களம், பாடசாலை சமூகத்தினர்,பொலிஸ் திணைக்களம், கரைச்சி பிரதேச சபையினர்,அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சமூக மட்ட அமைப்புகள், சமூக தொண்டர் அமைப்புகள் என பல்வேறு தரப்பினரும் இணைந்து சிரமதான முறையில் இந்த வேலைத்திட்டதினை முன்னெடுத்தனர்.

இதன்போது டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களான குப்பைகள், வெற்றுப் போத்தல்கள், நீர் தேங்கக் கூடிய இடங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு பெருமளவான திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு கரைச்சி பிரதேச சபையினரின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன. (4-6-100- 316)

# மதப் பதற்றம் ஏற்படுவதை தடுத்து நிறுத்துங்கள்

## உருத்திரபுரீஸ்வரர் ஆலய நிர்வாகம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(நெளுக்குளம்)

**கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் மதப் பதற்றம் மிகு சூழலொன்று ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. எனவே அதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு ஆலயத்தின் அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர்.**



குறித்த விடயம் தொடர்பாக வவுனியாவில் அமைந்துள்ள ஜனாதிபதியின் உப அலுவலகத்திற்கு விஜயம் செய்த அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பும் வண்ணம் மகஜர் ஒன்றை கையளித்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், எமது ஆலய வளாகத்தில் தொல்பொருட் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நில அளவை செய்யப்படவுள்ளதாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தவகையில் எமது ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்பொருள் சின்னம் அமைந்துள்ள நிலப்பரப்பினை எல்லைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை எதிர்வரும் 18 ஆம் திகதி மேற் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்செயற்பாட்டிற்கு நாம் எமது முழுமையான எதிர்ப்பினை பதிவு செய்கிறோம்.

இலங்கையில் சதுர ஆவுடையார் கொண்ட சிவலிங்கத்தை உடைய ஒரேயொரு சிவாலயம் என்னும் பெருமையையும், 2400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையையும் கொண்டது எமது ஆலயம். அதன் பூசை மரபுகளும், வழிபாடுகளும் மிக இயல்பாக நடைபெற்று வரும் சூழலில், தொல்பொருளியல் திணைக்களத்தின் தலையீட்டினால் எமது மண்ணிலோ இயல்பான இயங்கு நிலையிலுள்ள எமது ஆலயச்சூழலிலோ மதப்பதற்றம் மிகு சூழலொன்று ஏற்படுவதை நாமோ எமது மாவட்ட மக்களோ விரும்பவில்லை.

எனவே இவ்விடயத்தில் உயரிய கரிசனைகொண்டு, தொல்பொருளியல் திணைக்களத்தின் இத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதாக வடக்கு-கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த 11ஆம் திகதி தாங்கள் வழங்கிய உறுதிமொழியை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டோம். அதற்கமைய எமது ஆலயத்தில் தொல்பொருளியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள அளவீட்டுப் பணிகளையும் அதனோடு தொடர்புடைய அகழ்வுப் பணிகளையும் தங்களின் நேரடித் தலையீட்டினால் நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தி , எமது இருப்பையும் இயங்கு நிலையையும், ஆலயத்தின் புனிதத் தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு ஆவண செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.(4-6-299)

# சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அகவை வருடாந்த மஹோற்சவம் நாளை 17 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 18 தினம் இடம்பெறவுள்ள இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10.51 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (4)

### 40 வருடங்களுக்கு பின்னர்

# திருக்கேதீச்சர ஆலயத்திற்கு யாழில் இருந்து கொடிச்சீலை



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு, கொடிச்சீலை உபயகரார்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

திருக்கேதீச்சர ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து திரு நெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள சிவ பெருமானுக்கு நேற்றுக் காலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.அதனைத் தொடர்ந்து திருக்கேதீச்சர ஆலயத்திற்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி எடுத்துச்செல்லப்பட்டு திருநெல்வேலி கென்னடி வீதியில உள்ள சண்முகநாதன் கபிலன் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங்கி வைக்கப்பட்டது.

திருக்கேதீச்சர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

1982ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீச்சரத்திற்கு கொடிச்சீலை வழங்கப்பட்ட நிலையில் யுத்த காலத்தில் அந்த முறை கைவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த வருடம் திருக்கேதீச்சரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில் 40 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்பட்டுள்ளது. (4-6-33-104)

# நடராஜர் சிலை திருடிய இராணுவ சிப்பாய் கைது



(நெளுக்குளம்)

வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ஆலயமொன்றில் இருந்து பித்தளை நடராஜர் சிலையை திருடியதாக சந்தேகத்தின் பேரில் இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கராயன் குளத்திலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் மாதாந்த விடுமுறையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய போதே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கோவிலில் உள்ள விக்கிரகத்தை திருடி விற்பனைக்காக பையில் வைத்துக்கொண்டிருந்த போது முச்சக்கரவண்டி சாரதிகள் குழுவினால் பிடிக்கப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் திருடப்பட்ட சிலையின் பெறுமதி சுமார் 50,000 ரூபா மற்றும் சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னம்மான் பச்சரிசி மூலியும் பெரியம்மான் பச்சரிசி மூலியும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சின்னம்மான் பச்சரிசி
Botanical Name- Euphorbiat thymifolia
Family- Euphorbiaceae.

பெரியம்மான் பச்சரிசி
Botanical Name- Euphorbia hirta
Family- Euphorbiaceae

சின்னம்மான் பச்சரிசியானது ஓராண்டு வாழக் கூடிய சிறிய தரையோடு படர்ந்து வளரும் செடியாகும். இலைகள் சிறியளவும் எதிரிலை அடுக்கம் கொண்டவை. இலைக் காம்புகள் மிகவும் சிறியவை. ஒரு பாலான பூக்கள் வருடம் முழுவதும் பூக்கும்.

பயிரிடப்பட்ட நிலங்களில் களைப் பயிராகப் பரம்பிக் காணப்படும். சின்னம்மான் பச்சரிசியை கீரையாக தனியாக கடைந்தோ துவரம் பருப்புடன் சேர்த்தோ. சமைத்து சாப்பிடலாம். உட லில் அதிகரித்த உஷ்ணத்தை தணிக்கக் கூடியது.

சின்னம்மான் பச்சரிசி இலைச்சாற்றில் 15-30 மில்லி அளவு விஷக் கடிகளுக்கு உள்ளுக்கு கொடுக்கலாம்.

பெண்களுக்கு மாதவிடாய் ஒழுங்காக இல்லாத போது இதன் வேரில் 35 கிராம் எடுத்து நன்கு கழுவி 200 மில்லி லீற்றர் நீர் விட்டு 50 மில்லி லீற்றர் ஆக வற்ற குடிநீர் காய்ச்சி காலை மாலை எடுக்க மாதவிடாய் ஒழுங்காகும்.

குழந்தைகட்கு குடலினுள் புழுக்களை அகற்றிட இதன் இலைகளையும் விதைகளையும் குடிநீர் காய்ச்சி 10-20 மில்லி லீற்றர் அளவு தினமும் தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு எடுக்க வேண்டும்.

வட்டக் கடிக்கு இதிலிருந்து வடியும் பாலை வெளிப்பிரயோகமாக பூசலாம். இதன் இலைகளிலிருந்து வடியும் பாலை உதடு நா வெடிப்பிற்கு பூசலாம்.

சின்னம்மான் பச்சரிசி செடியை வேருடன் சேகரித்து கழ்வி உலர்த்திப் பொடித்து கற்கண்டுப் பொடியை அதேயளவு சேர்த்து வேளைக்கு 35 கிராம் அளவு உட்கொண்டு உடனே காய்ச்சிய பசுவின் பாலைக் குடிக்க உடலிற்கு பலத்தை கொடுக்கும்.

இதன் இலைகளை நன்கு அரைத்து குழந்தைகட்கு ஏற்படும் அக்கிக்குப் பூசலாம். சின்னம்மான் பச்சரிசி இலை-2 கைப்பிடியளவு. தூதுவளையிலை - 2 கைப்பிடி யளவு. பசு செய் - 10 கிராம். உள்ளி -3 பல்லு. உழுந்து -10 கிராம். தேங்காய்ப் பூ- சிறிதளவு. சுட்ட புளி- சிறிதளவு. உப்பு- தேவையானளவு. செத்தல் மிளகாய்-6. நெய்யில் வறுத்த மிளகாய். உப்பு. புளி இவற்றை அம் மியில் அரைத்து இவற்று டன் மேற்படி இலைகள் இரு வகையையும் நெய் விட்டு வதக்கி உழுந்தையும் வறுத்து அரைத்து தேங்காய்ப் பூவையும் சேர்த்தரைத்து உள்ளியையும் வைத்தரைத்து துவையல் செய்து வாரத்தில் 4 நாட்கள் சாப்பிட்டு வர நீர்த்து உடைந்து போன தாதுவை கட்டுப்படுத்தி தாது விருத்தியுடன் உடல் பலத்தையும் பெறச் செய்யும்.



நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்க சின்ன அம்மான் பச்சரிசி- 50 கிராம். சிவத்தப் பச்சரிசி -50 கிராம். கசகசா- 50 கிராம். கடலைப் பருப்பு- 50 கிராம். பொட்டுக்கடலை- 50 கிராம். சோளமா- 50 கிராம். திணை மா- 50 கிராம். உளுத்தம்மா- 50 கிராம். பயறு -50 கிராம். சிவத்தப் பச்சரிசி. கடலைப் பருப்பு. பொட்டுக்கடலை. கசகசா இவற்றையும் இடித்து பொடித்து மாவாக்கி ஏனைய மாக்களுடன் கலந்து வைத்துக் கொள்ளவும். 6 மாத குழந்தைகளிலிருந்து 6 வயது குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து நிறைந்த சத்துணவாகும்.

குழந்தைகட்கு இந்த மாவை பனைவெல்லம் சேர்த்து கஞ்சி வைத்துக் கொடுக்க என்பு. பல் பலமடைந்து வளர்ச்சியடைவதுடன் உடலிற்கு நல்ல பலத்தையும் நோய் எதிர்ப்பாற்றலையும் ஊக்குவிக்கும்.

சின்னம்மான் பச்சரிசி இலைகளை நெய்யில் வதைக்கி சாதத்துடன் சாப்பிட்டு வர. உதடு வெடிப்பு. உதட்டுப்புண் ஆகியவற்றை ஆற்றி உடல் வறட்சியை போக்கி குளிர்ச்சியை உண்டு பண்ணும்.

சின்னம்மான் பச்சரிசி பெரிய அம்மான் பச்சரிசி இரண்டும் செடி வகையாகவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வேறு இன மூலிகைகளாகும்.

பெரியம்மான் பச்சரிசி குத்துச் செடியாகும். வெண்ணிறப் பூக்கள் பூங்கொத்தாக ஒவ்வாரு கணுக்களுக்கு இடையிலும் மிளகு பருமனில் காணப்படும். இது ஒரு கீரையாகும்.

அம்மான் பச்சரிசி இலைகளை உள்ளி. வெங்காயத்துடன் சேர்த்து நன்றாக வதக்கி சட்னி தயாரித்து சாப்பிட்டு வர உடலிற்கு குளிர்ச்சியை தருவதோடு மலச்சிக்கலையும் தடுக்கின்றது.

வீக்கம். கொப்பளங்கள் உள்ள இடத்தில் இந்த இலைகளை அரைத்து பற்றுப் போட்டு வர 5 நாட்களில் குணம் கிடைக்கும்.

பாசிப் பருப்புடன் இதன் இலைகளைச் சேர்த்து சமைத்துச் சாப்பிட வாய்ப் புண். குடற்புண் ஆறும்.

இதன் இலைகளை ஒடிக்கும் போது வடியும் பாலை வறண்ட உதடு. நாக்குப்புண். வாய்ப்புண் போன்றவற்றிற்கு பூச அவை ஆறும்.

கறுத்த தோல் மற்றும் மருக்கள் உள்ள சருமத்தில் இதன் பாலை தடவி சில நிமிடங்கள் கழித்து இளஞ்சூட்டு நீரில் கழுவி வர அவை மறையும். தொடர்ச்சியாக செய்து வரலாம்.

சுத்தமான பசுப்பாலுடன் இதன் பூக்களை நன்றாக கழுவி அரைத்து கொஞ்சமாக பசுவின் பாலுடன் இதனைச் சேர்த்து காலையில் 18 நாட்களுக்கு தொடர்ந்து குடித்து வந்தால் தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.

பெரிய அம்மனான் பச்சரிசி இலைகளை நிறையளவில் சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து சிவந்த பச்சரிசி மாவுடன் கலந்து பிட்டு. இடியப்பம் ஆக தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வர மலக்கட்டு தன்மையை நீக்கக் கூடியதாக இருக்கும்.

வயது வந்தும் பூப் பெய்தாத பெண்களுக்கு அம்மான் பச்சரிசி இலைகளை ஆய்ந்து ஒரு கைப்பிடி அளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு 10 கிராம் பெருங்காயம். 10 கிராம் எள்ளு. பனைவெல்லம் 10 கிராம் எடுத்து பசுவின் பால்விட்டு அவித்து கழுவி உலர்த்தி பொடித்து 5 கிராம் வீதம் காலை. மதியம். இரவு தேனில் 5-7 நாட்கள் தொடர்ச்சியாக கொடுத்து வர ருது வாகாத பெண்கள் ருதுவாகி விடுவார்கள்.

வேப்பிலை 3 .அம்மான் பச்சரிசி இலைகள் 10. 3 மிளகு சேர்த்து அரைத்து காலையில் சாப்பிட்டு வர இரத்தம் சுத்தியாகும்.

எவ்வளவு பெரிய மருவாக இருந்தாலும் இந்த அம்மான் பச்சரிசி செடியின் பாலை மரு மீது கனமாக பூசிவர மருவை உதிரச் செய்யும்.

காலில் ஆணி தோன்றி இருப்பதன் காரணமாக நடக்க முடியாமல் கஷ்டப்படுபவர்கள் அம்மான் பச்சரிசி செடிகளை உடனே கொய்ந்து அந்தச் செடியின் காம்புகளை ஒடித்தால் அதிக பால் கொட்டும் . இந்தப் பாலை காலில் உள்ள ஆணியின் மேல் கனமாக தடவ வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை மாலை தொடர்ச்சியாக 2 வாரங்கள் தடவி வந்தால் கால் ஆணிகள் வெளியே வந்துவிடும்.பெரிய அம்மான் பச்சரிசி இலைகளை தேவையான அளவு சேகரித்துக் கழுவி நிழலில் உலர்த்தி சருகு போல் காய வைத்து உரலில் இடித்து துணியில் அரித்து ஒரு வாய் அகன்ற சீசாவில் போட்டு வைத்து 4 கிராம் அளவு காலை, மாலை கற்கண்டுத் தூள் சேர்த்து பசும்பாலுடன் அருந்தவும்.

இவ்வாறு தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டு வர தாது விருத்தி அடையும். உடலுக்கு பலத்தையும் உரத்தையும் கொடுக்கும்.

**100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்**

புரதம் 4.7 கிராம்,தாது உப்பு-3.2 கிராம்.இரும்பு- 21.2 மி.கிராம்.கல்சியம்- 546 மி.கிராம். பொஸ்பரஸ்-106 மி.கிராம்.

20 கிராம் பெரிய அம்மனர் பச்சரிசி இலைகளோடு 100 கிராம் முளைக் கீரையை சேர்த்து சமைக்கலாம். அமுத்தமான சிகை இருந்தால் இதைப் பொடியாக நறுக்கிக் கொள்ளலாம். இதனை சாப்பிட்டு வர உடல் குளிர்ச்சி அடையும்.மலத்தை இளக்கி வெளியேற்றும். சிறுநீர் எரிச்சல் ஆகியவைகளும் இரத்தம் விருத்தி சுத்தியாவதுடன் விருத்தியும் உண்டாகும். கர்ப்பப்பை சம்பந்தமான நோய்களுக்கும் சிறந்த மூலிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 143

# கையூட்டால் வந்த வினை

ஒரு ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு மகன். சகல சுகபோகங்களோடு தன்னுடைய ஒரே வாரிசை தாலாட்டி சீராட்டி வளர்த்து வந்தார்.

ஆனால், ஒரே ஒரு குறை! தனது மகனுக்கு படிப்பு வரவில்லை என்று, உடனே செல்வந்தர் குடுக்க முடிஞ்ச இடத்திலெல்லாம் லஞ்சத்தை குடுத்து, மகனை மருத்துவர் படிப்புக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அவனுக்கோ படிப்பு வராதே. வகுப்பறையில் பாடத்தில் கவனம் செலுத்தாது தூங்கி தூங்கி விழுந்தான். இறுதியில் பரீட்சை எழுதும் நாளும் வந்தது.

ஒரு கேள்விக்கும் விடை தெரியாமல் விழித்து கொண்டிருந்தான். திடீரென அவனுக்கு ஒரு யோசனை. தன்னுடைய சட்டைப் பையினுள் இருந்த பணத்தினை எடுத்து பரீட்சைத் தாளுக்கு உள்ளே வைத்து அனுப்புகிறான்.

பரீட்சைத் தாளை திருத்துபவரிடம் இது போய் சேர்கிறது. பணத்தை பார்த்ததும் யோசிக்கிறார். சிறிது நேரத்திற்கு பிறகு, பணத்தை எடுத்துக்கொண்டு, அந்த மாணவனை பாஸ் செய்து விடுகிறார். இப்பொழுது அவன் ஒரு மருத்துவர் ஆகிவிட்டான்.

ஆனாலும் என்ன பயன்? அவனுக்குதான் ஒன்றுமே தெரியாதே! வருகிற நோயாளிகளுக்கெல்லாம் கண்மூடித் தனமாக சிகிச்சை அளித்தான். ஒருநாள், ஒரு பெண் மணியை அவசர அவசரமாக மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அந்தப் பெண்ணுக்கு உடனடியாக ஆப்ரேசன் பண்ணனும், இல்லையென்றால் இறந்துவிடுவார் என்ற நிலை.

ஆப்ரேஷன் தியேட்ட்ரில் அவனுக்கு வியர்த்து கொட்டுகிறது. முறையாக படிக்காமல் இப்படி வந்துவிட்டோமே என்று அவன் மனம் பிதற்றியது: கத்தியை கையில் எடுத்து கண்டபடி வெட்டி கீறுகிறான். அவன் மனம் முழுக்க பயம் நிறைந்திருந்தது.

எல்லாத்தையும் செய்து முடிக்கும்போது, அந்த பெண்மணி உயிரோடு இல்லை. தலையை பிடித்து கொண்டு அழுகிறான். ஆப்ரேசன் தியேட்டருக்கு வெளியே இருக்கும் அந்த பெண்மணியின் கணவருக்கு அருகில் சென்று "மன்னித்து விடுங்க உங்கள் மனைவியை காப்பாற்ற முடியவில்லை", என்று தலைகுனிந்தபடி சொல்ல கணவர் நிமிர்ந்து (நீர் ததும்பிய விழிகளுடன்) பார்க்கையில் இருவருக்கும் மிகப்பெரிய அதிர்ச்சி.

அந்த பெண்மணியின் கணவர் வேறு யாருமில்லை, அந்த மாணவனுக்கு லஞ்சத்தை ஏற்றுக்கொண்டு, அவனை பாஸ் செய்துவிட்டவர்தான். அந்த பெண்ணின் கணவரால் பேச முடியவில்லை. இப்பொழுது இவன் மீது புகார் அளித்தாலும், அவனை பாஸ் செய்துவிட்ட தன்னிடம் தான் எல்லாம் வந்து முடியும் என்று புரிந்துகொள்கிறார். அழுது கொண்டே தன் மனைவியின் சடலத்தை பார்க்க உள்ளே சென்றார்.

இங்கு லஞ்சம் குடுத்த, வாங்குன மூன்று பேருக்கும் என்ன நடந்தது னு பார்த்தீங்களா? அந்த அப்பா ஊரை ஏமாற்றி தன் மகனை படிக்கவைக்க லஞ்சம் கொடுத்தார். இறுதியில் அந்த மகன் அவரை ஏமாற்றினான்.

தான் மருத்துவராக வேண்டுமென பாஸ் ஆக லஞ்சம் கொடுத்தான். இன்று மிகப்பெரிய குற்ற உணர்ச்சியில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். லஞ்சம் வாங்கிக்கொண்டு அந்த மாணவனை மருத்துவர் ஆக்குவதற்கு பாஸ் செய்து விட்டவர், தன் மனைவியை இழந்துவிட்டார்.

இதுதான் லஞ்சம் கொடுப்பதாலும் வாங்குவதாலும் நடக்கும். இன்று சிறுக சிறுக லஞ்சம் கொடுத்தால்/ வாங்கினால் நாளை கொலை, கற்பழிப்பு போன்ற விஷயத்துக்கும் லஞ்சத்தை தான் கையாளுவோம். மனிதர்களிடமிருந்து தப்பிக்க முடியும், இயற்கையிடமிருந்து தப்பித்தலாகாது.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவினால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் 31 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் மின்னஞ்சல் மூலம் (sivasamayavaharam@gmail.com) அல்லது இருவெட்டுக்கள் மூலம் அனுப்புதல் அவசியமாகும்.


கட்டுரைகள் 5-7 பக்கங்களில் அனுப்புதல் வேண்டும். ஏற்கனவே நல்லைக்குமரன் மலரில் வெளிவந்த, வேறு நூல்களில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

அனுப்புபவர்கள் தங்களின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடல் அவசியமாகும்.

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15.07.2023 ஆகும். பிந்திய ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என யாழ்.மாநகர சபை ஆணையாளரும் சைவசமய விவகார குழு தலைவருமான இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (4)

# வான்-லொறி மோதி விபத்து 26 பேர் உடல் கருகிப் பலி

## மெக்சிகோவில் சம்பவம்



(மெக்சிகோ)

வடக்கு மெக்சிகோ நாட்டில் தமவுலிபாஸ் என்ற இடத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் நேற்று வானும், லொறியும் நேருக்கு நேர் பயங்கரமாக மோதி இரு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன. விபத்தில் சிக்கிய வானில் குழந்தைகள் உட்பட 30 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்தனர். வான் தீப்பிடித்து எரிந்ததால் அவர்களால் வெளியே வரமுடிய வில்லை. இதனால் 26 பேர் வானுக்குள் கருகி உயிரிழந்தனர். (நி)

# கவிதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் அழ.பகீரதனின் ஐந்தாவது கவிதைத் தொகுப்பான "ஐப்பசியில்" நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது. ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளரும் மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு.சுந்தர சிவத்தின் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில், நூலுக்கான அறிமுக உரையை கவிஞரும் ஆய்வாளரும் ஆசிரியருமான ந.குகபரன் ஆற்றவுள்ளார்.

அவ் உரையைத் தொடர்ந்து சபையோரின் கருத்துரையும், நூலாசிரியரின் ஏற்புரையும் இடம்பெறும்.

ஆர்வலர்கள் அனைவரையும் இந் நூல் வெளியீட்டில் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர். (4-6)


உ
சிவமயம்

காரைநகர், வியாவில்
பூரணை புட்கலாம்பிகா சமேத அரிகர
புத்திர ஐயனார் ஆலய
மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா விஞ்ஞாபனம்

காலம்:- 17.05.2023 புதன்கிழமை
காலை 7.00 மணி

மெய்யடியார்களே!

மேற்படி தேவஸ்தானம் கருங்கல் திருப்பணியாக புனரமைக்கப் பெற்று மஹாகும்பாபிஷேகம் முறைப்படி 03.05.2023 அன்று பிரதிட்டா சிரோண்மணி க.ச.சோமஸ்கந்தக்குருக்கள் தலைமையில் நல்லை ஆதீனம் அவர்கள் முன்னிலை வகிக்க சிறப்பாக நடத்தி வைக்கப் பெற்றது. தொடர்ந்து 14 நாட்கள் உரிய விதிப்படி அபிஷேகம், ஆராதனை நிகழ்ந்து பூரணை புட்கலாம்பிகா சமேத அரிகர புத்திரனார் வீதி வலம் வந்து அடியவர்க்கு அருள்பாலித்தார். ஐயனின் மண்டலாபிஷேகம் பூர்த்தி விழா காலை 7 மணியளவில் மங்கலங்களை வேண்டி விக்கினங்களை அகற்றும் விக்னேஸ்வரப் பெருமானுக்கான பூசையுடன் தொடங்கி 1008 சங்குகளால் முறைப்படி அபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அபிஷேகத்தைத் தொடரந்து அடியவர்களிற்கான மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும். மாலை வசந்தமண்டபத்தில் பூரணை புட்கலாம்பிகா சமேத அரிகர புத்திர ஐயனாருக்கு விசேட அலங்காரங்களுடனான பூசை நடைபெற்று சுவாமி அலங்கரிக்கப் பெற்ற பூந்தண்டிகையில் எழுந்தருளி வந்து அருள்பாலிப்பார். இம்மண்டலாபிஷேக பூர்த்தி விழாவில் அடியார்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஐயனாரின் பேரருளை பெற்றுய்வார்களாக.

தேவஸ்தானம்.

(சி 6553)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் கொடுப்பனவு உள்ளிட்ட பொது உதவிகள் மாற்றமின்றி வழங்கப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொது உதவிகள் குறைக்கப்படாமல் .தொடர்ந்தும் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறிப்பிட்ட சிலருக்கு அரசினால் வழங்கப்படும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி, முதியோர் உதவி உள்ளிட்ட பொது உதவி கள் குறைக்கப்படாமல் வழங் கப்படும் என் அமைச்சர் குறிப் பிட்டார்.

நட்டஈட்டுப் பலன்களை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் இரண்டாவது உப ஆவணத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

# மக்களின் ஆணையில் மட்டும் மீண்டும் மகிந்த பதவிக்கு வருவார்

## நாமல் சூளுரை

(கொழும்பு)

தலைமைப் பொறுப்பிலிருந்து விடை கொடுத்த போது மக்களுடன் இருந்த மகிந்த, மக்களின் ஆணையின் அடிப்படையில் மட்டுமே மீண்டும் பதவிக்கு வருவார் என நாமல் தெரிவித்துள்ளார்.

மகிந்த பிரதமராக பதவி ஏற்றுக்கொள்வார். இதனால் கலகம் ஏற்படும் என்ற அடிப்படையில் கொழும்பில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது அர்த்த மற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்த நாடு சரியான பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ள தருணத்தில் மீண்டும் போராட்டங்களை நடத்துவது பயனற்றது.

கொழும்பில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதனால் நாட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் என்பதுடன், சுற்றுலாப் பயணத்துறைக்கு தாக்கம் ஏற்படும்.

போராட்டம் நடத்துவதனால் ராஜபக்ஷர்களும் ரணிலும் விழப் போவதில்லை எனவும் இதனால் ஒட்டுமொத்த நாடே விழும்



எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பாராளுமன்றை தீயிட்டு கொளுத்த முயற்சித்தவர்களை கண்டுபிடிக்குமாறு ஜனாதிபதியிடம், நாமல் ராஜபக்ஷ கோரியுள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 300 |
| தக்காளி | 550 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 300 |
| கரட் | 150 | 350 | 400 |
| பூசணி | 80 | 50 | 100 |
| புடோல் | 120 | 150 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 400 | 500 | 450 |
| வெண்டக்காய் | 120 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 160 |
| பயற்றங்காய் | 200 | 120 | 150 |
| லீக்ஸ் | 250 | 350 | 400 |
| பீற்றூட் | 250 | 300 | 350 |
| கறிமிளகாய் | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 800 |
| போஞ்சி | 550 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 200 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 350 |
| வெங்காயப்பூ | -- | 300 | -- |
| முள்ளங்கி | 80 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | 200 | -- |

# வைகாசி மாத இராசி பலன்கள் 15.05.2023-15.06.2023

## மேஷம்

**வெள்ளை உள்ளமும் விடாப்பிடியான குணமும் கொண்ட மேஷ இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் மாதத் தொடக்கத்திலேயே நீச்சம் பெற்று சனியைப் பார்க்கிறார். விரயாதிபதி குரு உங்கள் இராசியிலேயே இருக்கிறார். லாபாதிபதியான சனி, லாப ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். ராகு -கேதுக்களின் பலம் கூடுதலாக இருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும்.

**ராகு-கேது சஞ்சாரம்**

மாபெரும் கிரகங்களின் வரிசையில் "சாயா கிரகம்" என்று அழைக்கப்படும் கிரகங்கள், ராகு - கேதுக்கள் ஆகும். நிழல் கிரகங்களாக இருந்து அவை பின்னோக்கிச் சென்றாலும், வாழ்க்கையில் நாம் முன்னேற்றிச் செல்ல வழி வகுத்துக் கொடுக் கும். ஜென்மத்தில் ராகு, ஏழில் கேது என்று இருப்பதால் உங்களுக்கு சர்ப்பதோஷம் ஏற்படுகிறது. எனவே அதற்குரிய சர்ப்ப தோஷ நிவர்த்தி பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில், அனுகூலமான தலங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது. முயற்சிகளில் குறுக்கீடுகள் வரலாம். காரியம் முடிவடையும் நேரத்தில் விட்டுப் போகலாம். ஏற்றமும் இறக்கமும் வந்து கொண்டேயிருக்கும். "எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலவில்லையே" என்று கவலைப்படுவீர்கள். சுபவிரயங்கள் அதிகரிக்கும் நேரம் இது.

**கடக - சுக்கிரன்**

வைகாசி 16 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் சுபகாரியப் பேச்சு கைகூடும். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். எனவே நீண்டநாட்களாக இல்லத்தில் மங்கல ஓசை கேட்கவில் லையே என்று கவலைப் பட்டவர்களுக்கு, திருமணம் கைகூடி வரும். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய திருப்பங்களை சந்திப்பீர்கள். வியாபாரம், தொழில் வெற்றிநடை போடும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவோடு, அனைத்து சலுகைகளையும் பெறும் யோகம் உண்டு. வெளிநாட்டில் இருந்து உத்தியோகம் சம்பந்தமாக வரும் அழைப்புகள் உள்ளத்தை மகிழ்விக்கும்.

**ரிஷப - புதன் வைகாசி**

18 ஆம்திகதி ரிஷப இராசிக்கு புதன்வருகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும். சகாய ஸ்தானம் மற்றும் ஜீவன ஸ்தானத்துக்கு அதிபதியான புதன், சுக்கிரனோடு இணைந்து "புத-சுக்கிர யோக"த்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கள் கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். இடம், வீடு வாங்கும் முயற்சி வெற்றி தரும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ, வெளிநாடு செல்வது சம்பந்தமாகவோ எடுக்கும் முயற்சி வெற்றியாகும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் செல்வாக்கு மேலோங்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு அளவோடு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு சலுகைகளைப் பெறுவர். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடிவரும். மாணவ - மாணவிகளுக்கு படிப்பு சிறப்பாக அமையும். பெண்களுக்கு ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பக்கத்து வீட்டாருடன் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப் படத்தக்கதாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும்.

## ரிஷபம்

**விடாமுயற்சியே வெற்றிக்கு வழி என்று சொல்லும் ரிஷப இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தன ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். அதேநேரத்தில் விரய ஸ்தானத்தில் லாபாதிபதி குரு சஞ்சரிக்கிறார். எனவே விரயங்கள் மிக அதிகமாக இருக்கும் என்றாலும், அதற்கேற்ப வரவும் வந்து கொண்டேயிருக்கும். வருமானத்தை பொறுத்தவரை கவலைப்படத் தேவையில்லை. சுப காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறப் போகிறது. வீடு கட்டுவது, வாகனம் வாங்குவது போன்றவற்றில் ஈடுபாடு காட்டுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் சனி பலம் பெற்று இருப்பதால், எந்த தொழில் செய்பவராக இருந்தாலும் அதில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். சூரிய பலத்தால் பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பின்னோக்கிச் செல்லும் கிரகங்களான ராகு பகவான், உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்திலும் கேது பகவான் 6 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கின்றனர். இதன் விளைவாகப் பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். குருவோடு இணைந்திருக்கும் ராகுவால் ஓரளவு நற்பலன்களை எதிர்பார்க்கலாம். அதேநேரம் கேது பகவான் ஆறில் இருப்பதால் மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும். சில நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். விலை உயர்ந்த பொருட்கள், அடிக்கடி பழுதாகி வேதனையைத் தரும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகள் கிடைத்து மனச்சஞ்சலத்தை அதிகரிக்க செய்யும். சங்கிலித் தொடர்போல கடன் சுமை அதிகரிக்கும்.

**கடக - சுக்கிரன்**

வைகாசி 16 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்குகிறார். சகோதர ஸ்தானம் பலப்படுவதால் உடன் பிறப்புகள் வழியில் நன்மை கிடைக்கும். உடன்பிறந்தவர்களின் திருமணம் கைகூடும். வழக்குகள் சாதகமாக அமையும். வருமானப் பற்றாக்குறை அகலப் புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பாதியில் நின்ற பல பணிகள், தற்போது துரிதமாக நடை பெறும். 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால், புதிய வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். கூடுதல் சம்பளத்துடன் வேலை கிடைக்கலாம். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

**ரிஷப - புதன்**

வைகாசி 18 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் வருகிறார். அங்குள்ள சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குகிறார். எனவே கல்வி, கலை சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். ஒரு சிலர் இழந்த பதவிகளை மீண்டும் பெறுவர். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு ஒரு சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடி வந்துசேரும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு போதிய மூலதனம் கிடைத்து தொழிலை விரிவு செய்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சகப் பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். மேலிடத்து ஆதரவு கிடைக்கும். கலைஞர்களுக்கு சாதகமான நேரம் இது. பெண்களுக்கு மனதை அரித்த கவலை அகலும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 179





அது ஒரு விசாலமான மண்டபம். கல்லைக் குடைந்து எடுத்து அமைத்த நிலவறை மண்டபம். அதனாலேதான் தலையை இடித்து விடும் போல் அவ்வளவு தாழ்வாகச் சமமட்டமான மேல்த்தளம் அமைந்திருக்கிறது.

அந்த நிலவறையில் குடிகொண்டுள்ள மங்கிய நிலவொளி வெளியிலிருந்து வருவது அல்ல கூரை வழியாகவோ பல கணி வழியாகவோ வருவதும் அல்ல. அங்கங்கே அந்த நிலவறையில் கும்பல் கும்பலாகவும் சில இடங்களில் பரவலாகவும் வருகிறது. ஆ! அப்படி நிலவொளி வீசும் அப்பொருட்கள் எத்தகைய பொருட்கள்! ஒரு மூலையில் மணி மகுடங்கள் முத்தும் மணியும் வைரமும் பதித்த மகுடங்கள் இன்னொரு பக்கத்தில் ஹாரங்கள் முத்து வடங்கள் நவரத்தின மாலைகள், அதோ அந்த வாயகன்ற அண்டாவில் என்ன? கடவுளே! அவ்வளவும் புன்னை மொட்டுக்களைப் போன்ற வெண் முத்துக்கள்! குண்டு குண்டான கெட்டி முத்துக்கள்! அதோ அந்தப் பானையில் பளபளவென்று மஞ்சள் வெயில் வீசும் பொற்காசுகள்.

இதோ இங்கே குவிந்து கிடப்பவை தங்கக் கட்டிகள். தஞ்சை அரண்மனையின் நிலவறைப் பொக்கிஷம் இது தான் போலும்! தனாதிகாரி பழுவேட்டரையரின் மாளிகையையொட்டி இந்த இருள் மாளிகையும் அதில் இந்தப் பொக்கிஷ நிலவறையும் இருப்பதில் வியப்பில்லையல்லவா? அம்மம்மா! இந்த நிலவறைக்குள் நாம் வந்து சேர்ந்தோமே? பாக்கிய லட்சுமியும் அதிர்ஷ்ட தேவதையும் சேர்ந்தல்லவா நம்மை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்? எப்படிப்பட்ட அதிசயமான, அபூர்வமான இரகசியத்தை, நம்முடைய முயற்சி ஒன்றும் இல்லாமலே நாம் தெரிந்து கொண்டோம்! இதை எப்படிப் பயன்படுத்துவது? பயன்படுத்துவது அப்புறம் இருக்கட்டும் இங்கிருந்து போவதற்கே மனம் வராது போலிருக்கிறதே! இங்கேயே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கலாம் போலத் தோன்றுகிறதே! இங்கேயே இருந்தால் பசி, தாகம் தெரியாது! உறக்கம் அருகிலும் அணுகாது! நூறு வருஷ காலமாகச் சோழ நாட்டு வீர சைன்யங்கள் அடைந்த வெற்றிகளின் பலன்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன.

நவநிதி என்று சொல்வார்களே அவ்வளவும் இங்கே இருக்கிறது! குபேரனுடைய பொக்கிஷத்தையும் தோற்கடிக்கும் செல்வக் களஞ்சியம் இங்கே இருக்கிறது. இதை விட்டு எதற்காகப் போக வேண்டும்! வந்தியத்தேவன் அந்த நிலவறையைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு மூலையில் கிடந்த மணிமகுடங்களைத் தொட்டுப் பார்த்தான். இன்னொரு பக்கத்தில் கிடந்த ரத்தின ஹாரங்களைக் கையில் எடுத்துப் பார்த்தான். அவற்றைப் போட்டு விட்டு இன்னொரு பக்கம் சென்று செப்புப் பானையில் நிறைந்திருந்த முத்துக்களில் கைகளை விட்டு அளைந்தான்.

வேறொரு பானையில் கையை விட்டுப் பொற்காசுகளை அள்ளிச் சொரிந்தான். ஒரு மூலையில் தரையில் பளபளவென்று ஏதோ பரவலாக ஜொலிப்பதைக் கண்டு அங்கே சென்றான். முதலில் என்னவென்று தெரியவில்லை பிறகு, குனிந்து உற்றுப் பார்த்தான். ஐயோ! ஆண்டவனே! அது ஓர் எலும்புக்கூடு! ஒரு காலத்தில் சதையும் இரத்தமும் தோலும் உரோமமும் மூக்கும் முகமும் கண்ணும் காதுமாக இருந்த மனித உடலின் எலும்புக்கூடு!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப்படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதே!' என்று வேதனையடைந்தான். காவலர்களை அனுப்பி அந்தச் சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

காவலர்களும் நகர் பூராவும் சுற்றித் திரிந்து கடைசியில் ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர் தான் அந்தச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன், அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உங்களுடையதுதானா? என்று கேட்டான்.

கிழவி கண்களை நன்கு துடைத்துக் கொண்டு சலவைக்கல்லைப் பார்த்தாள். பிறகு, "ஆம் அரசே அது என்னுடைய பெயர் தான் தவறுதலாகப் பொறிக்கப்பட்டுவிட்டது போல் இருக்கிறது!"

"இல்லை அம்மா, என் பெயர் தான் முதலில் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்துவிட்டுத் தங்கள் பெயரை இதில் பொறித்துவிட்டுச் சென்றிருக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை," என்றான் அரசன்.

"நான் இந்தப்பக்கம் வந்தது கூட இல்லை. அப்படியிருக்க இதில் என் பெயர் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

"தாயே, இந்தக் கோயில் பணியில் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறித்திருக்க மாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்னவென்று கூறுங்கள்!" என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி, ""மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை ஆனால், ஒன்று மட்டும் செய்திருக்கிறேன். இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என் வீட்டுப் பக்கமாகத் தான் வரும்.

அந்த சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் மோர் கொடுப்பேன். குதிரைகளுக்குச் சிறிது புற்களை கொடுத்து தண்ணீர் காட்டுவேன். அவ்வளவுதான் நான் செய்தது," என்றாள் கிழவி.

"தாயே! நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவே, தான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார்.

தன்னலமற்ற தங்கள் தொண்டினை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக் காட்டும். வாழ்க தங்கள் புகழ்!" என்று கூறிய மன்னன், அந்தக் கிழவிக்கு நிறைய பொருள் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.
>
> - டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் ஆளுநராக இருந்து பதவியிழந்து வீடு செல்லும்போது...

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்களின் பதவி நேற்றுடன் (15) முடிவுக்கு வந்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் மட்டுமன்றி, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்களின் பதவிகளும் முடிவுறுத்தப் பட்டுள்ளன.

இனி, மேற்குறித்த மாகாணங்களுக்கான ஆளுநர்களை ஜனாதிபதி நியமிக்கும்வரை அடுத்த ஆளுநர் அவரா? இவரா? என்ற ஊகங்கள் நீடிக்கவே செய்யும்.

எது எவ்வாறாயினும் பதவிகளில் இருக்கும்போது ஆளுநர்கள் ஆற்றிய பணி என்ன என்று ஆராய்வது பொருத்துடையது.

அந்தவகையில், வடக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்த ஜீவன் தியாகராஜா அவர்கள் தனது ஆளுநர் என்ற அதிகாரத்தின் கீழ் வடபகுதி மக்களுக்கு ஆற்றிய சேவை என்ன? என்று கேட்டால், எதுவுமில்லை என்பதுதான் அதற்கான பதிலாக இருக்க முடியும்.

ஆம், மாகாண சபைச் சட்டங்களின் பிரகாரம் ஆளுநர் என்ற பதவி விசேட அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

அதிலும் மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண அரசு கலைக்கப்பட்டு, தேர்தல் மூலம் புதிய மாகாண அரசு தெரிவு செய்யப்படும் வரையான காலப்பகுதியில் மாகாணங்களின் ஒட்டுமொத்த நிர்வாகத்துக்கும் அதன் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஆளுநரே மூலமூர்த்தியாக இருப்பார்.

அந்த அடிப்படையில் வடக்கு மாகாண அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்னர்; ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர் ஜீவன் தியாகராஜா.

ஆக, மாகாண அரசாங்கத்தின் தீர்மானங்கள், திட்டங்கள் என எதற்கும் ஒப்புதல் அளிக்கின்ற சூழமைவு இல்லாத - தனித்து ஆளுநர் தீர்மானங்களை எடுக்கின்ற அதிகாரம் கூடிய காலப்பகுதியில் அந்தப் பதவியில் இருந்தவர் அவர்.

எனினும் அவர் வடக்கு மக்களுக்கு எந்த வேலைத்திட்டத்தையும் செய்தாகவில்லை என்பதுதான் உண்மை.

மாறாக, வடக்கு மாகாணத்தில் சிறப்பாகச் சேவையாற்றிய இலங்கை நிர்வாக சேவையில் சிரேஷ்ட பதவி நிலைகளில் இருந்தவர்களை இடமாற்றம் செய்து நிர்வாகக் குழப்பங்களை ஏற்படுத்தியதைத் தவிர, அவர் வேறு எதனையும் செய்யவில்லை.

இதேவேளை யாழ்ப்பாணம் ஆரியகுளம் புனரமைக்கப்பட்டு அதனை மக்கள் பாவனைக்கு விடுகின்ற நிகழ்வில் ஆளுநர் ஜீவன் தியாகராஜா தன்னையொரு சிங்களவர் போல் அடையாளப்படுத்தியமை அவரின் மனநிலை எத்தகையதென்பதைச் சுட்டி நின்றது.

இதற்கும் மேலாக, மக்களுக்கு சேவை செய்வதென்பதைவிட, அரசாங்கத்துக்கு விசுவாசமாக நடப்பது என்ற எண்ணத்துடன் ஆளுநர் செயற்பட்டதன் காரணமாக அவரால் எந்தப் பணியையும் செம்மையாகச் செய்ய முடியவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

# எந்நேரத்திலும் தேர்தலை நடத்துங்கள் முடிந்த ஒத்துழைப்பை வழங்குவோம்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

விரும்பிய எந்நேரத்திலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்த எங்களால் முடிந்த ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கூடிய எதிர்க் கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,அரசாங்கம் தாம் நினைக்கும் நேரங்களில் தாம் நினைக்கும் விதத்தில் தமது காலக்கெடுவுக்கு ஏற்ற வகையில் தேர்தல் வரைபடத்தை உருவாக்குவது ஜனநாயகச் செயல் அல்ல எனவும் ஜனாதிபதியோ அல்லது அவருக்கு ஆதரவானோரின் விருப்பத்திற்கேற்ப தேர்தல் வரைபடத்தை தயாரிப்பது தவறு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஆனால் அரசாங்கம் கொண்டுவருவதற்கு தயாராக உள்ள ஜனாதிபதி தேர்தலை திட்டமிட்ட நேரத்திற்கு முன்னதாக நடத்தும் பிரேரணையை எதிர்கட்சியாக முழுமையாக ஆதரிப்பதாகவும் அதனை விரைவில் நடத்துவதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கொண்டுவருவதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை நல்குவதாகவும் ஜனாதிபதித் தேர்தல் சவாலை ஏற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அதேபோல் எதிர்க்கட்சிகளின் சகல அரசியல் சக்திகளையும் பயன்படுத்தி தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய அபிலாஷைகளை மையமாகக்கொண்ட பயணத்திற்கு தயார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் பல்வேறு செய்திகளை கட்டமைக்காமல் முறையாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால்,

அதற்குத் தேவையான சகல ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும்,ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதியொருவரின் கீழ் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் இழுதடிப்புச் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (ம-7,9)

# முல்லையில் இராணுவ முகாமில் பணிபுரியும் தமிழ் பெண்கள் போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்காவில் இராணுவ முகாமில் பணிபுரியும் தமிழ் பெண்கள் நேற்று இரவு வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

கொக்காவில் இராணுவ முகாமில் இருந்து வவுனியா இராணுவ முகாமுக்கு செல்லும் படியாக அறிவித்தல் கிடைத்துள்ள நிலையில் அங்கு தம்மால் செல்ல முடியாதெனத் தெரிவித்தே இப்போராட்டம் இடம்பெறுகிறது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் தமிழ் பிள்ளைகள். மொத்தமாக 104 பேர் இருக்கின்றோம். 2012 இல் இருந்து இந்த முகாமில் தான் நாங்கள் கடமை புரிகிறோம்.

எங்களை வேலைக்கு எடுக்கும்போது கிளிநொச்சியில் தான் வேலை என்று எடுத்தார்கள். ஆரம்பத்தில் எங்களை வேலைக்கு எடுக்கும் போது ஆமி வேலை என்று சொல்லவும் இல்லை.

நாங்கள் வந்து விட்டோம் என்பதற்காகவே இவ்வளவு காலமும்வேலை செய்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய சேவை காலமும் நெருங்கி விட்டது. ஆனால் இன்று திடீரென்று எங்களை வவுனியா செல்லும்படி சொல்கிறார்கள்.

கஷ்ட நிலைமையில் தான் நாங்கள் இந்த வேலைக்கு வந்தோம். ஆனால் வவுனியாவுக்கு செல்வதற்கு குடும்ப சூழலும் பொருளாதார நிலைமையும் இடம்கொடுக்காது.

இது தொடர்பில் பல முறை பேசியும் எந்த விதமான பதில்களும் கிடைக்கவில்லை. எங்களை ஆண்கள் தங்கும் இராணுவ முகாமுக்கே அனுப்புகிறார்கள்.

எங்களால் இந்த முகாமை விட்டு வேறு எந்த இடங்களுக்கும் செல்ல முடியாது என்றனர். (ம-7,9)

# கொழும்பின் விசேட பாதுகாப்பு நேற்று முதல் தளர்த்தப்பட்டது

கொழும்பில் பலப்படுத்தப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு நேற்று முற்பகல் முதல் நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்

பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவம் மற்றும் பொலிஸ் கலகத் தடுப்புப் பிரிவினர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் பலத்த பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.(ம-7,9)

# தொழுநோய் பரிசோதனைகள் பாடசாலைகளில் இனி இல்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் பாடசாலைகளில் தொழுநோய் பரிசோதனைகளை நடத்துவதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது பாடசாலை மாணவர்களின் மனநலம் கருதி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்த ஆண்டு 500 தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் இது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எனவும் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட தொழுநோய் பரிசோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் எனவும், பாடசாலைகளுக்குள் அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொள்ளமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார்.

ஒரு குழந்தை அடையாளம் காணப்பட்டால், அவர் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகிறார், எனவே நோயாளர்களை அடையாளம் காண மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

80 சதவீதத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு தொற்றாத தொழுநோய். இருப்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

இந்த நோயை சரியான முறையில் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் ஆறு மாதங்களுக்குள் குணப்படுத்த முடியும் என்றார்.(ம)

# நுரைச்சோலையின் 3 ஆவது அலகு மூடப்படும்

## எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் 03 ஆவது அலகு 100 நாட்களுக்கு மூடப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஜூன் 13 ஆம் திகதி முதல் 100 நாட்களுக்கு மின் உற்பத்தி நிலையத்தின் 03 ஆவது அலகு மூடப்படும் என அமைச்சர் டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த காலப்பகுதியில் மின்வெட்டு ஏதும் இருக்காது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேலும், பாரிய பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக மூடப்படும் இந்தக் காலப்பகுதியில் ஏனைய அனல் மின் நிலையங்களுடன் இணைந்து அதனை நிர்வகித்து மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

11


**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இதை நம்புவதும் மீனவர்களுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால் அதன் பின் நைலோன் வலை கடற்றொழில் ஆதிக்கம் செலுத்தியது.

மேலும் நைலோன் வலைகள் குறித்து மீன் நுகர்வோரால் ஒரு குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அதுயாதெனில் வலையில் அகப்படும் மீன்களை பருத்தி வலை அறுத்துவிடா. ஆனால் நைலோன் வலைகள் அகப்படும் மீன்கள்ள அறுத்து விடுவதாலும் அவற்றை வலையிலிருந்து எடுக்கும் போது இரத்தம் இழந்தனவாக உள்ளதாலும் அவை சுவையானவையாக இல்லை என்றும் கூறப்பட்டது.

### செவுள்வலை



செவுள்வலை (Gill Net) படம் -G

இலங்கை மீனவர்களால் செவுள்வலை (படம்-G) அதிகளவில் பயன்படுத்தப்பட்டு, மீன்பிடிக்கப்படுகிறது. மேற்படி வலையின் வினைத்திறன், கையாளுவதில் உள்ள சுலபம் என்பன இதற்கான காரணமாகும். வலைக்குக் குறுக்கே செல்லும் மீன்களின் செவுள் வலையில் சிக்கி சிறைபிடிக்கப்படுவதால் (அடைக்கப்படுவதால்) இவ்வுபகரணம் செவுள் வலை எனப்படுகிறது. இலங்கையில் பிடிக்கப்படும் மீன்களில் சுமார் 70% இம்முறையைக் கையாண்டு பிடிக்கப்படும் மீன்களேயாகும். கரையோரப் பிரதேசம், தூரக்கடல் (கரையிலிருந்து 22 km வரையான பிரதேசம்) ஆகியவற்றில் இது அதிகளவில் பயன்படுத்தப்பட்டு மீன்பிடிக்கப்படுகிறது. இது இயங்கா நிலை மீன்பிடி முறையாகும். இதுகூட்டமாகச் சஞ்சரிக்கும் மீன்களைப் பிடிப்பதற்கு மிக உகந்த முறையாகும். அத்துடன் இம்முறையில் மீன்களை தெரிவு செய்து பிடிக்க முடியும். நெத்தலி, சாளை மீன் போன்றவற்றைப் பிடிப்பதற்கு சிறிய கண்கொண்ட செவுள்வலையும் சூரை மீன், கெலவரன், திருக்கை, சுறா ஆகிய பெரியமீன்களைப் பிடிப்பதற்கு பெரிய கண்கள் கொண்ட செவுள் வலையும் பயன்படுத்தப்படும்.

செவுள்வலை நைலோன் நூல் மூலமாகத் தயாரிக்கப்படும். நன்னீர், உவர்நீர், சவர்நீர் ஆகிய சூழல்களில் இதனைப் பயன்படுத்த முடியும். ஒருவலை முடிச்சிலிருந்து அதற்கு எதிரேயுள்ள மறுவலை முடிச்சுக்கு இடைப்பட்ட குறுக்குத் தூரமே வலைக்கண்ணின் அளவு எனப்படும். நீரில் நீந்தி வரும் மீன்களின் பூ மூடிகளை (செவுள்) வலைக் கண்ணில் சிக்கச்செய்து செவுள்வலையில் மீன்கள் பிடிக்கப்படும். வலைக்கண்ணின் அளவை விடப் பெரிய பருமனைக் கொண்ட மீன்கள் வலைக் கண்களின் ஊடாகச் செல்லும் போது சிக்கிக் கொள்ளும். வலைக் கண்களை விடச் சிறிய பருமன் கொண்ட மீன்கள் கண்களினூடாக நீந்திசெல்லும். செவுள் வலையின் வினைத் திறன் அதிகரிப்புக்கு ஏற்ப அவை கட்டி வைக்கப்படும். இதனால் அதிக எண்ணி க்கையான மீன்கள் அவ் வலையில் சிக்கிகொள்ளும்.


மீன்கள் செல்லும் வழிக்குக் குறுக்கே ஒரு மதில் போன்று வலையானது இருக்கத்தக்கதாக அதனை இடுவார்கள். வலையின் மேற்பகுதியில் உள்ள நாணில் பிணைக்கப்பட்டுள்ள மிதபடிகள் (மிதவைகள்) மற்றும் வலையின் கீழ்ப் பகுதியில் உள்ள நாணில் கட்டப்பட்டுள்ள ஈயத்துண்டுகள் என்பன காரணமாக வலை நீரில் நிமிர்ந்தவாறு நிற்கும். வலைகளைத் தேர்ந்தெடுக்கையில் அவற்றின் வர்ணங்கள் மீதும் கவனஞ் செலுத்துதல் வேண்டும். நீரின் ஆழத்துக்கேற்ப வலையின் வர்ணத்தை மாற்றுவதால் அதிகளவு மீன்களைப் பிடிக்கலாம். உதாரணமாக குறைந்த வர்ணத்தாலான (வெளிர் நிறம்) வலை மேற்பகுதி நீருக்குப் பொருத்தமானதாகும். கடும் வர்ணத்தினாலான வலை ஆழ் கடலுக்கு உகந்ததாகும்.


செவுள்வலைகள் இரண்டு வகைப்படும். அவை மிதப்புச் செவுள்வலை மற்றும் படுப்புச்செவுள்வலை ஆகும்.

### மிதப்புச்செவுள்வலை

நீர் நிலையின் மேற்படையில் அல்லது குறிப்பிட்ட ஆழத்தில் மிதக்கத்தக்க விதமாக இடப்பட்ட செவுள்வலை மிதப்புச் செவுள்வலை எனப்படும். இதனை மிதக்கச்செய்யவென வலையின் மேற்பகுதியில் மிதப்புகள் பொருத்தப்பட்டிருக்கும். கீழ்ப் பகுதியில் சிறிய சுமைகள் பொருத்தப்பட்டிருக்கும். அதனை இயங்கா நிலையில் வைத்திருப்பதற்கு நங்கூரம் அல்லது பாரம் பொருத்தப்பட்டிருக்கும். இதனை சில பகுதிகளில் அடையல் வலை எனவும் அழைக்கின்றனர்.

இவ்வலை கடல் நீரோட்டத்திற்கு ஏற்பவே பயன்படுத்தப்படுகின்றன. இது கடற்கரையோரப் பகுதிகளிலும் வடபகுதியில் உள்ள கடல் நீர் ஏரிப்பகுதிகளிலும் பயன் படுத்தப்படுகின்றன. இதில்மணலை, கயல்மீன், பாலை மீன், முரல் மற்றும் சிறிய வகை மீன்கள் பிடிக்கப்படுகின்றன.




மிதப்புச் செவுள் வலை படம் H2 (கடல் நடுவில்)

### படுப்புச்செவுள்வலை

கீழ்படையில் விரித்தல் வகை செவுள்வலை படுப்புச் செவுள்வலை எனப்படும். இந்த வலையின் அடிக்கு அண்மையில் வலையில் தாங்கி வைத்திருப்பதற்கான சுமைகள் பொருத்தப்பட்டிருக்கும்.



படுப்புச் செவுள்வலை (Bottom gill net) படம்-J

இது கடலின் அடித்தளத்தில் வாழும் மீன் இனங்களைப் பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கடலின் தரை அமைப்பானது முருங்கைக் கற்பாறைகள் கொண்டதாக இருத்தல் இவ் வலையின் உபயோகத்திற்குச் சிறந்ததாகும். ஏனெனில் கல்மீன் வகைகள் கூடுதலாகப் பிடிக்க வாய்பாக அமையும். அடித்தளத்திலிருந்து சுவர் போன்று நிறுத்தப் படுவதனால் நீரோட்டத்தின் திசைக்கு ஏற்பச் செல்லும் மீன்கள் வலையின் கண்களில் சிக்குண்டுவிடுகின்றன. வலையின் கண் அமைப்பைக் கொண்டு திருக்கை வலை, ஆமை வலை, கல்லு வலை என வேறுபடுத்தப்படுகின்றன. இவ்வாறு படுப்பு வலை மூலம் திருக்கை, ஆமை, சுறா, விளைமீன், கலவாய், சிங்க இறால், நண்டு போன்றவை பிடிக்கப்படுகின்றன.

இலங்கையில் பயன்டுத்தப்படும் ஆனால் பாதிப்பை ஏற்படுத்தும் மீன்பிடி முறைகளாக பகுப்புச் செவுள் வலை, முட்டைவலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை முருங்கைக் கற்கள், கற்பாரங்கள் ஆகியவற்றுக்கிடையிலுள்ள மீன்களைப் பிடிக்க பயன்படுத்தப்படும். இங்கு முருங்கைக்கற்கள் கற்பார்கள் என்பவற்றை உடைத்து மீன்களை வெளியே வரச்செய்து மீன்கள் பிடிக்கப்படும். இதனால் முருகைக்கற்கள் அதிகளவில் அழிவடையும். அதிக உயிர்ப்பல்வகைமை கொண்ட கடல் மழைக்காடுகள் என அழைக்கப்படும். அதிக உற்பத்தி இயலளவு கொண்ட முருங்கைகற்கள் வளர நீண்ட காலம் செல்லும். கடலரிப்பைத் தடுக்க உதவும் முருங்கைக்கற்களைப் பாதிப்புறச் செய்யும். இந்த மீன்பிடிமுறை தடை செய்யப்பட்டுள்ள போதும் இந்த மீன் பிடிமுறை இன்னமும் சிலரால் பயன்படுத்தப்படுகிறது. மேற்கு, தெற்கு, கிழக்குப் பிரதேசங்களில் இந்த முறைபிரபல்யமானதாகும்.

### வழிச்சல் வலை

இலங்கையில் நவீனமயப்படுத்தப்பட்ட வலைகளுள் வழிச்சல் வலை முக்கிய இடத்தை வகிக்கின்றது (படம் K). நைலோன் நூலினால் பின்னப்பட்ட வலைகளே இதற்குப் பாவிக்கப்படுகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

னியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உயிரிழந்த நிலையில் காணப்பட்டவர் யாசகத்தில் ஈடுபடுபவராக இருக்கலாம் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது. (ம-7,9,250)

## இலங்கை அரசு...

பணிப்பாளர் பரமேஸ்வரன் ஐயர் தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் நலன்புரி நலத்திட்டம் பற்றி விரிவாக விவாதித்த உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர், இலங்கையின் அர்ப்பணிப்பைப் பாராட்டினார்.

நலன்புரி திட்டங்களின் அனுபவத்தை பகிர்ந்து கொண்ட ஐயர், இலங்கையின் நலன்புரி செயற்பாட்டிற்கான தனது பாராட்டையும் தெரிவித்தார். (ம-7,9)

## குளவி கொட்டி...

முகமது நிலா சபானா என்பவரே உயிரிழந்தவராவார்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலை எடுத்துச் செல்லும் வழியில் குறித்த பெண் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,33)

## இலங்கை...

அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் விசேட பிரதிநிதிகள் குழு இலங்கை மத்திய வங்கியில் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடகச் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையின் தனியார் கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் சர்வதேச நாணய நிதியம் ஈடுபடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பேரண்ட பொருளாதார இலக்குகளை அடைவதை உறுதி செய்வதற்காக, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்து இலங்கை அதிகாரிகளுடன் சர்வதேச நாணய நிதியம் தொடர்ச்சியான ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாக, இந்த ஊடக சந்திப்பில் கருத்துரைத்த, சர்வதேச நாணய நிதியத்தின், ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## சீனி, பால்மா...

சீனியை 243 ரூபாயுக்கு கொள்வனவு செய்ய முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 400 கிராம் பால்மா பக்கெற் ஒன்றின் விலை 60 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,080 ரூபாயாகும். (ம-7,9)

## நாட்டுக்கு...

படுத்துவதற்கு தேவையான ஆலோசனையையும் அழுத்தத்தையும் அரசுக்கு வழங்குமாறு சர்வதேச நாணய நிதிய குழுவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன்,சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூயர் உள்ளிட்ட குழுவினர் நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினரைச் சந்தித்தனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக விரிவாக விளக்கமளித்த எதிர்க்கட்சித் தலைவர், சலுகை அடிப்படையில் இக்கட்டான காலகட்டத்தில் இலங்கைக்கு உதவுமாறும் சம்பந்தப்பட்ட தூதுக்குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

அரச நிர்வாகம் சீரற்று இருப்பதாகவும், திருட்டு மற்றும் துஷ்பிரயோகங்களை இல்லாதொழித்து நாட்டுக்கு கிடைக்கும் பணத்தை வெளிப்படைத் தன்மையுடன் பயன்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் அழுத்தங்களையும் அரசாங்கத்திற்கு வழங்கு மாறும் எதிர்க்கட்சித் தலைவர் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தார். (ம-7,9)

## வடக்கு...

மூன்று மாகாணங்களின் ஆளுநர்களை இன்று (நேற்று) அமுலாகும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி நீக்கம் செய்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்களே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், புதிய ஆளுநர்கள் புதன்கிழமை நியமிக்கப் படவுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், வடமேல்மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ம-7,9)

## வடக்குக்...

தெரிவித்தார்.

சில தமிழ் கட்சிகள் கையொப்பமிட்டு அனுப்பிய வரைபொன்று தனக்கு கடந்த 8ஆம் திகதி கிடைத்ததாகவும், அந்த யோசனையை நடைமுறைப் படுத்துவோமா எனக் கேட்டு, அந்த யோசனை வரைபின் பிரதிகளை சிலரிடம் வழங்கினார்.

6 மாதங்களுக்கு வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பில் இந்த யோசனை தயாரிக்கப்பட்டிருந்தது.

இந்த யோசனையை நடைமுறைப் படுத்துவோமா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்க, சி.வி.விக்னேஸ்வரன் அந்த யோசனையை வாசித்து விளக்கமளிக்க ஆரம்பித்தார்.

எனினும், ஏனைய தமிழ் கட்சிகள் விக்னேஸ்வரனை இடைமறித்து, அந்த யோசனையில் தமக்கு உடன்பாடில்லையென தெரிவித்தனர்.

இடைக்கால சபையொன்று அமைவதை நாம் எதிர்க்கவில்லை, ஆனால் இப்படியான யோசனைகளுக்கு முன்னர் மாகாண சபை தேர்தலை தள்ளிவைக்காமல் உடனடியாக மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டுமென அனைவரும் வலியுறுத்தினர்.

அரசும் தமிழ் தரப்பும் இணைந்து ஒரு குழு அமைத்து, அடுத்து என்ன செய்வது என ஆராய்வோமா எனக் கேட்டார்.

தமிழ் தரப்பினர் கூட்டாக அதை நிராகரித்து விட்டனர். அரசாங்கத்தின் இந்தக் குழு அமைக்கும் யோசனைகளின் பின்னணி எமக்கு தெரியும், இவற்றில் நாம் கலந்து கொள்ளவில்லை, மாகாண சபை தேர்தலை நடத்துங்கள் என கூறினர்.

அரசியலமைப்பு திருத்தம் பற்றி ரணில் விக்கிரமசிங்க பேச முயற்சித்த போது, அதை அடுத்ததாக செய்யலாம், முதலில் மாகாணசபை தேர்தலை நடத்தி, மாகாண சபையை இயங்க வைக்கலாம் என தமிழ் தரப்பில் கூறப்பட்டது.

தேர்தலை நடத்துவது பற்றி அரசாங்கத்துடன் தான் பேசிவிட்டு வருவதாகவும், ஜூன் மாதத்தில் மீண்டும் சந்திப்போம் என ஜனாதிபதி கூற, நேற்றைய சந்திப்பு எவ்வித தீர்மானமுமின்றி முடிவடைந்தது. (ம-7,9)

## முள்ளிவாய்க்...

தமிழ் இனப்படுகொலை நினைவாக இடம்பெறும் முள்ளிவாய்க்கால் ஊர்திப் பவனி சாவகச்சேரி நகரை வந்தடைந்தபோது இராணுவத்தினால் இடையூறு மேற்கொள்ளப்பட்டது. (ம-7,9)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1570
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 9 6 1 2 3 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1145
Z 23 28 44 62
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.05.15
சீட்டிழுப்பு இலக்கம் 3357
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
M 04 08 41 63
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 15/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1463
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
O 25 04 34 54 57

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.15
சீட்டிழுப்பு இலக்கம் 424
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 06 36 39 54 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/15
சீட்டிழுப்பு இலக்கம் 5115
U 5 0 8 4 0 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2089
நிறம் இளநீல
சீட்டிழுப்பு திகதி 2023.05.15
தினம் திங்கட்கிழமை
L 09 16 17 56
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,943,080/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.15
வெற்றி வாரம்: 4250
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,083,442.90
வெற்றி இலக்கங்கள்
03 33 34 42 G
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,165,369/-
திகதி 2023-05-15
வெற்றி வாரம் 3801
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
05 12 28 36
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,929,160/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 33 08 40 52 75
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 329,978,569.40
சீட்டிழுப்பு வாரம் 1255
2023.05.15 திங்கள்
DLB

ஜயோதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.05.15
வெற்றி வாரம் : 1921
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 42,880,991.60
வெற்றி இலக்கங்கள்
36 49 62 68 P
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 1915
சீட்டிழுப்பு திகதி : 2023.05.15
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 50,438,052.80
வெற்றி இலக்கங்கள்
08 16 36 53 F
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகின்றது....!

ஒமேகா வெளியீடுகள் சில
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் ஊடாக வெளிவந்துள்ளது.

தொகுப்பு : ஒமேகா A – J. R. சிறிகாந்த் -இன்

**புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும்**
**தரம் 04, 05 மாணவர்களுக்கான,**

தரம் - 05
கணிதம், நுண்ணறிவு சார்ந்த 1200 வினாக்கள் ரூ. 1100
சுற்றாடல் சார்ந்த 1200 வினாக்கள் ரூ. 950

தரம் - 04
கணிதம், நுண்ணறிவு சார்ந்த 1000 வினாக்கள் ரூ. 950
சுற்றாடல் சார்ந்த 1000 வினாக்கள் (C-6555) ரூ. 890

வெளியீடு :
Unilanka's Publication & Book Depot
No. 326, Sea Street, Colombo 11.
Tel : 011 4014438
Hotline : 077 7220324 / 077 6258778



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15529)

076 825 7716 (ஆகாஸ்)



## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE



அன்னை முத்துமாரி
பேருந்து சேவை
இனிவரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும்
பெயரில் அதே
நிர்வாகத்தின் கீழ்
இயங்கும் என்பதை
அறியத் தருகின்றோம் 077 544 8503
(15337)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6561)

வயது :-30 வயதிற்குட்பட்டோர்
(இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா
விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா
ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா
ஜெர்மனி பிரான்ஸ்
லண்டன் சுவிஸ்
அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-6560)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777



## "யாழ் சென் றோக்ஸ்"
## மகளீர் கிராமிய அபிவிருத்திச்சங்கம்
## வருடாந்த விளையாட்டுப் போட்டிகள்


14.05.2023 தொடக்கம்
21.05.2023 வரை
இடம் - சென்றோக்ஸ் விளையாட்டு
மைதானம் குருநகர்
(15525)

அனுசரணை
கு. ஸ்ரெல்லா
கபிரியேல் பிறைவேட் லிமிட்டெட்
கபிரியேல் , தன்னார்வ உதவிமையம்
சுவிஸ்லாந்து



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 84 பரப்பு**
**(நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**



- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை - கடல், தெற்கு எல்லை - பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் ரூபாய் (1000,000/=).

076 911 9371, 076 739 0413,
077 874 8135
(15531)





# 1ஆம் ஆண்டு
# நினைவஞ்சலி

## அமரர் சுப்பிரமணியம்
## புவனேஸ்வரி (புவனம்)

தோற்றம்
08.09.1954

திதி: சதுர்த்தசி

மறைவு
29.05.2022



அன்பின் ஊற்றாகி எம்
ஆழ்மனங்களில் பதிந்திருக்கும்
எம் அருமை அன்னையே!
வருடம் ஒன்று ஓடி மறைந்ததம்மா
மாறுமோ எம் மனங்களில்
உன் நினைவு!
நீங்கள் எம்முடன் இல்லை என்றாலும்
உம் நினைவுகள் எம்முடனேயே
வாழும் அம்மா!

கடந்த 29.05.2022 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப குல விளக்கின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் 18.05.2023 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

வீ.எம்.றோட்,
பருத்தித்துறை. (15528)

தகவல்: பிள்ளைகள்
077 669 1803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.